விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 318 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 16 புதன்கிழமை (02.11.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




சுடுவதென்றால் சுட்டுத் தள்ளுங்கள்

## கோப்பாய் மாவீரர் துயிலுமில்லம் முன் குழப்பம்



(யாழ்ப்பாணம்)

பௌத்த கொடியை நட்டால் நாம் கழற்றுவோம். சுடுவதென்றால் சுடுங்கள் என கோப்பாய் மாவீரர் துயிலுமில்லம் முன் இராணுவத் தினருடன் முன்னணியினர் நேற்று முரண்பட்டுக் கொண்டனர்.

யாழ்ப்பாணம் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு முன்பாக வுள்ள வீதியை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நேற்று மாலை சிரம தானம் செய்ய முற்பட்டபோது குழப்ப மான சூழல் ஏற்பட்டுள்ளது.

மாவீரர்களை நினைவுகூரும் கார்த்திகை மாதம் நேற்று ஆரம்பித்துள்ள நிலையில் 15

மந்துவில் மேற்கில்

## வீடுடைத்து நகைகள் திருட்டு

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரி விற்குட்பட்ட மந்துவில் மேற்கு பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று செவ்வாய்க் கிழமை பகல் திருடர் 15

அரசின் அடக்குமுறைக்கு எதிராக

# கொழும்பில் இன்று மாபெரும் போராட்டம்

## 20 அரசியல் கட்சிகள் 150 தொழிற்சங்கங்கள் ஆதரவு



(கொழும்பு)


அரசின் அடக்குமுறைக்கு எதிராக இன்று மாபெரும் போராட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த போராட்டத்துக்கு 20 அரசியல் கட்சிகள் 150 தொழிற்சங்கங்கள் ஆதரவு தெரிவித்துள்ளன.

(15ஆம் பக்கம் பார்க்க)

மன்னார் இலுப்பைக்கடவையில்

## விபரீத முடிவெடுத்த இளைஞன் உயிரிழப்பு



(மன்னார்)

மன்னார் இலுப்பைக் கடவைப் பகுதியில் விபரீத முடிவெடுத்து இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் 15

காங்கேசன்துறையில்

## கடற்படைச் சிப்பாய் சடலமாக மீட்பு

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை கடற் படை முகாமில் கடமை யாற்றும் கடற்படைச் சிப் பாய் ஒருவர் நேற்று செவ் வாய்க்கிழமை அவரது விடுதியில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் கண்டி யைச் சேர்ந்த சன்னி அப்புகே சுரங்க ரொசாந்த சில்வா (வயது-34) என்பவரா 15

காதலியுடன் முரண்பாடு

## வீடியோ அழைப்பு எடுத்து உயிர்மாய்த்த இளைஞன்

(ஏழாலை)

காதலியுடன்ஏற்பட்ட முரண் பாடு காரணமாக வீடியோ அழைப்பில் காதலியை அழைத்து தூக்கில் தொங்கி இளைஞர் ஒருவர் உயிரை மாய்த்துள்ளார்.

ஏழாலை கிழக்கு, ஏழாலை யைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞனே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

தனியார் கல்வி நிலைய ஊழியராகக் கடமை யாற்றும் மேற்படி 15

## அமைதி வழிப் பேரணியை அடக்க முற்படக்கூடாது

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

கொழும்பில் இன்று முன்னெடுக்கப் படவுள்ளபேரணியானது அமைதி வழிப் பேரணியாகும். அதனை 15

## காதல் விவகாரம்; இளைஞன் உயிரிழப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கெருடாவில் பகுதியில் இளைஞன் ஒருவர் விபரீத முடிவெடுத்ததில் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன் தினம் இடம்பெற்றது. காதல் விவாகரம் காரணமாக குறித்த இளைஞர் விபரீத முடிவெடுத்து உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகின் றது.

சம்பவத்தில் சாவ கச்சேரி கெருடா 15

கிளிநொச்சியில்

## முதியவர் ஒருவர் சடலமாக மீட்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி 15

## கோண்டாவிலில் விபத்து; முதியவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பொலிஸ் பிரி விற்குட்பட்ட கோண்டாவில் - உப்புமடம் சந்தியடியில் நேற்று இடம் பெற்ற விபத்தில் முதிய வர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், நடந்து சென்ற முதியவரை, மோட்டார் சைக்கிளில் வந்த பெண் ஒருவர் மோதியுள்ளார். இதில் காயமடைந்த முதியவர் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந் துள்ளார். 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18ஆம் ஆண்டு நினைவுகள்



தோற்றம் 10 - 05 - 1946

மறைவு 02 - 11 - 2004

அமரர்

## கணபதிப்பிள்ளை இரத்தினசிங்கம்

(கோட்டக் கல்விப் பணிப்பாளர் - ஊர்காவற்துறை)

எம் இனிய அப்பா!
என்றுமே தோற்றுப்போகா மனிதர்!
வாழ்வை சமராடி வென்றிட்ட
உத்தம போராளி!! தூரத்தே கண்ட
கனவுகளை வார்த்தையாய் வடிக்க
மனமின்றி ஊமையாய் ஒடுக்கி
உள்ளத்தின் ஒரு புறத்தில்...
பேதையாய் இருந்த எம்மை புடமிட்டு
வலி தாக்கி புவிமீது தவழ
விட்ட புண்ணிய வானே!!
உன்பாதம் சரண் புகுந்தோம்
சாதனை புலபுரிந்து சத்தியத்தில்
நிலைத்திருக்க ஆசிமழை
பொழிந்திடுவாய் என்றென்றும்

நின் நினைவுடன்

மனைவி, மக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(13325)

## நெல்லியடியில் வீட்டின் முன் நிறுத்தப்பட்ட மோ.சைக்கிள் திருட்டு

(கரணவாய்)

நெல்லியடியில் உள்ள வீடு ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸில் முறையிடப் பட்டுள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு வீட்டின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை நேற்று செவ்வாய்க் கிழமை காலை பார்த்தபோதே திருடப் பட்டமை தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண் டுள்ளனர். (ம-7.60)

# மரண அறிவித்தல்

## மயில்வாகனம் பாக்கியநாதன் (கிளி அண்ணா)

இலங்கை யாழ்ப்பாணம் வடமராட்சி இந்திரம்மன் கோவிலடி, துன்னாலை மத்தியை பிறப்பிடமாகவும் ஜேர்மனி நாட்டை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் பாக்கியநாதன்(கிளி அண்ணா) கடந்த (30.10.2022) ஞாயிற் றுக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் லீலா வதியின் அன்பு மகனும் கலாராணி (ஜேர்மனி) அன்புக் கணவரும் அருண்ஜா, வருண்ஜா, சரண்ஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : தம்பி
பத்மநாதன் ஜேர்மனி (பத்தன், நாதன்)
0491733932687

(C-5197)

# மரண அறிவித்தல்

## திருமதி தங்கரட்ணம் கந்தசாமி (பரமேஸ்வரி)

பிறப்பு 1932.11.30

இறப்பு 2022.11.01



யாழ்ப்பாணம், கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாக வும் கொண்ட தங்கரட்ணம் கந்தசாமி அவர்கள் நேற்று (2022.11.01) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னையா - அன்னப்பிள்ளை தம்பதி களின் அன்பு மருமகளும் கந்தசாமியின் (சமாதான நீதவான்) பாசமிகு மனைவியும் சுசீந்திரன் (ஓய்வுபெற்ற பிராந்திய முகாமை யாளர் - மக்கள் வங்கி), சுகந்தி, சுமந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயந்தி, யோகேந்திரன், கௌசல்யாதேவி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பவித்திரா (லிவர்பூல்), பிரீத்திகா (ஆசிரியை - யா/கைதடி முத்துக்குமாரசாமி ம.வி), பிருந்தா (வைத்தியர் - யாழ்.போதனா வைத்தியசாலை), திவ்யா, நிருஜா (லண்டன்), ஹரிகிஷன் (லண்டன்), ஜெய்கிஷன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பாட்டியும் ஆதிரன், ஆதித்தன், அகரன், ஓவியா, இனியா ஆகியோரின் பூட்டியும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, சின்னம்மா, சந்திரசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.11.2022) வியாழக் கிழமை பி.ப 2 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.27, கச்சேரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

தகவல்:- குடும்பத்தினர்
தொடர்பு:- 021 221 2603

(13324)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மாணவர்களிடையே தீவிரமடையும் ஐஸ் போதைப்பொருள்

## கட்டுப்படுத்த ஒன்றிணையுமாறு ரத்னதேரர் அழைப்பு



**(கொழும்பு)**

**கொவிட் வைரஸ் தொற்றுப் பரவலை காட்டிலும் ஐஸ் போதைப்பொருள் பாவனை சமூகத்தில் தீவிரமடைந்துள்ளது. பின்தங்கிய பாடசாலை மாணவர்கள் கூட தற்போது ஐஸ் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி உள்ளார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்தார்.**

இலங்கை கம்யூனிச கட்சி காரியாலயத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது, கொவிட் பெருந்தொற்று வைரஸ் பரவலை காட்டிலும் தற்போது ஐஸ் போதைப்பொருள் பாவனை சமூகத்தில் வேகமாக தீவிரமடைந்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் கொலன்னாவ, மாளிகாவத்தை, கொட்டாஞ்சேனை, கிருலப்பன ஆகிய பகுதிகளில் போதைப்பொருள் பாவனை மற்றும் வியாபாரம் வெளிப்படை தன்மையாகவே முன்னெடுக்கப்படுகிறது. 2021 ஆம் ஆண்டு அறிக்கையின் பிரகாரம் பதினைந்து வயதிற்குட்பட்ட 50 சதவீதமான மாணவர்கள் பாடசாலை கல்வியில் இருந்து இடை விலகியுள்ளார்கள்.

இவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியானதே. வறுமையின் காரணமாக பாடசாலை கல்வியை இடைநிறுத்தி விட்டு கொழும்பு உட்பட நகரப் பகுதிகளுக்கு தொழில் வாய்ப்பு தேடி வரும் இளைஞர் யுவதிகள் பாதாள மற்றும் போதைப்பொருள் வியாபாரிகளின் பிடிக்குள் சிக்குண்டு தமது எதிர்காலத்தை இல்லாதொழித்துக் கொள்கிறார்கள்.

ஐஸ் போதைப்பொருள் பாவனைக்கு பாடசாலை மாணவர்கள் அடிமையாகியுள்ளார்கள். தலைநகரில் உள்ள பாடசாலைகள் மாத்திரமல்ல கிராமப்புற பாடசாலை மாணவர்களும் ஏதோவொரு போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளமை கவலைக்குரியது. பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் வியாபாரம் முன்னெடுக்கப்படுகிறது.

ஐஸ் போதைப்பொருள் பாவனைக்கு எதிராக கடுமையான சட்டத்தை இயற்றும் வகையில் இரண்டு வார காலத்திற்குள் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு நீதியமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளோம். அரசியலமைப்பின் 22ஆவது திருத்தத்தை காட்டிலும் ஐஸ் போதைப்பொருளுக்கு எதிரான சட்டத்தை இயற்ற அவதானம் செலுத்த வேண்டும்.

பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ள பின்னணியில் சமூக கட்டமைப்பில் போதைப்பொருள் பாவனை மற்றும் வியாபாரம் தீவிரமடைந்தால் அது பாரதூரமான எதிர்விளைவுகளை ஏற்படுத்தும். போதைப்பொருள் பாவனைக்காகவே வழிப்பறி கொள்ளை, கொலை, கடத்தல் உள்ளிட்ட சமூக விரோத செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. வழிப்பறி கொள்ளை தற்போது சாதாரணமாகி விட்டது.

போதைப்பொருள் ஒழிப்புக்கு எதிராக மதத் தலைவர்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் சீனாவில் அபின் போதைப்பொருள் பாவனைக்கு எதிராக தேசிய மட்டத்தில் எதிர்ப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதை ஓர் எடுத்துக்காட்டாக கருதி நாமும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

# ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்து நாட்டை செயலிழக்க செய்ய வேண்டாம்

## ஐ.தே.க கோரிக்கை

(கொழும்பு)

வீழ்ச்சியடைந்திருந்த நாட்டின் பொருளாதாரம் தலை தூக்கி வரும் நிலையில் அதனை மீண்டும் வீழ்ச்சியடையச் செய்து அரச அராஜக நிலையை ஏற்படுத்தவே எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டத்துக்கு தயாராகி வருகின்றன.

அத்துடன் நாட்டுக்கு அதிக வருமானம் கிடைக்கும் சுற்றுலாப் பயணிகளின் வருகை நாளை 3 ஆம் திகதியே ஆரம்பிக்கின்றது.

ஆர்ப்பாட்டம் மேற்கொண்டு அதனை தடுக்க வேண்டாம் என ஐக்கிய தேசிய கட்சி எதிர்க்கட்சிகளிடம் கோரிக்கை விடுத்தது.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த கட்சியின் கரன்தெனிய தொகுதி அமைப்பாளர் சட்டத்தரணி நுவன் சொமிரத்ன இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில், நாட்டுக்கு அதிக வருமானத்தை ஈட்டித் தரும் சுற்றுலாத்துறை தற்போது முன்னேற்றமடைந்து வருகின்றது.

இதன் காரணமாக சுற்றுலாத்துறையை நம்பி வாழ்ந்து வரும் பல தொழிலாளர்கள் கடந்த கால ங்களில் எதிர்கொண்டு வந்த பிரச்சினைகளில் இருந்து மீள ஆரம்பித்துள்ளனர்.

அதேபோன்று வீழ்ச்சியடைந்திருந்த ஏனைய துறைகளும் படிப்படியாக தலை தூக்க ஆரம்பித்திருக்கின்றன.

மேலும் நாட்டுக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை நாளை 3 ஆம் திகதியே ஆரம்பிக்கின்றது. இதன் மூலம் பாரியளவில் டொலர்களை நாட்டுக்கு எதிர்பார்க்கின்றோம்.

எதிர்பார்க்கப்படும் டொலர்கள் கிடைக்கப்பெற்றால் மக்கள் எதிர்கொண்டு வரும் பொருளாதார கஷ்டங்களுக்கு ஓரளவு தீர்வு காணமுடியும் என்றே அரசாங்கம் தெரிவித்து வருகின்றது.

மக்கள் வாழமுடியாத அளவுக்கு நாடு முற்றாக செயலிழந்திருந்தது. இந்நிலையிலேயே மக்கள் வீதிக்கிறங்கினர். அதில் நியாயம் இருந்தது.

ஆனால் மக்கள் அன்று எதிர்கொண்டுவந்த பிரச்சினைகள் முற்றாக தீராவிட்டாலும் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் காணப்பட்டு வருகின்றன.

மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண ஜனாதிபதி உட்பட அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவரும் நிலையில், வீதிக்கிறங்கி ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கான நோக்கம் என்ன? நாட்டை மீண்டும் அராஜக நிலைக்கு கொண்டு செல்வதே இவர்களின் திட்டம். அதனால் மக்கள் இதற்கு துணைபோகக்கூடாது.

அத்துடன் சுற்றுலாத் துறை தலைதூக்கி வரும் நிலையில், ஆர்ப்பாட்டம் நடத்தி மீண்டும் அதனை செயலிழக்கச் செய்ய வேண்டாம் என எதிர்க்கட்சிகளை கேட்டுக்கொள்கின்றோம் என அவர் தெரிவித்தார். (நி)

# டொலர் தட்டுப்பாடு காரணமாக பால்மா இறக்குமதியில் வீழ்ச்சி

(கொழும்பு)

டொலர் தட்டுப்பாடு காரணமாக இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் எண்ணிக்கை குறைந்துள்ளதாக விநியோகஸ்தர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, சந்தையில் பால்மா விநியோகத்தை அதிகரிக்க அல்லது திறந்த கணக்கு முறையின் கீழ் பால்மாவை இறக்குமதி செய்வதற்கான வாய்ப்பை வழங்குவதற்கு இலங்கை மத்திய வங்கியின் ஊடாக டொலருக்குரிய சலுகைகளை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

வெண்ணெய், யோகட் மற்றும் திரவபால் இறக்குமதி தொடர்பான தற்போதைய நிலைமை குறித்தும் கலந்துரையாடப்பட்டதுடன், திரவ பால் உற்பத்தியை மேம்படுத்துவதற்கு வர்த்தக அமைச்சின் கீழ் உள்ள அரச அமைச்சுகள் ஊடாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (நி)

# ஆட்பதிவுத் திணைக்களத்தின் கட்டணங்கள் நேற்று முதல் அதிகரிப்பு

(கொழும்பு)

தேசிய அடையாள அட்டை உள்ளிட்ட ஆட்பதிவுத் திணைக்களத்தின் பல்வேறு சேவைகளுக்கான கட்டணங்கள் நேற்று செவ்வாய்க்கிழமை முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, முதன்முறையாக தேசிய அடையாள அட்டையைப் பெறுவதற்கு 200 ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டையின் நகலைப் பெறுவதற்கான கட்டணம் 1000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் தேசிய அடையாள அட்டையின் திருத்தப்பட்ட பிரதியை வழங்குவதற்கு 500 ரூபாவும் காலாவதியான தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக புதிய தேசிய அடையாள அட்டையைப் பெறுவதற்கு 200 ரூபாவும் அறவிடப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஒரு நாள் சேவையினூடாக தேசிய அடையாள அட்டையை விநியோகிப்பதற்கான விண்ணப்பக் கட்டணத்திற்கு மேலதிகமாக 2000 ரூபாவும் அறவிடப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆப்கானிஸ்தானை வீழ்த்தி இலங்கை சிறப்பான வெற்றி



இருபது-20 உலகக் கிண்ணத் தொடரின் சுப்பர்-12 குழு 1 இல் நடைபெற்ற தொடரின் 32ஆவது போட்டியில், இலங்கை கிரிக்கெட் அணி 6 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

பிரிஸ்பேன் மைதானத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இப்போட்டியில் இலங்கை கிரிக்கெட் அணியும் ஆப்கானிஸ்தான் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஆப்கானிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 144 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் ஆப்கானிஸ்தான் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக குர்பாஸ் 28 ஓட்டங்களையும் உஸ்மான் கானி 27 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இலங்கை கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில் வனிந்து ஹசரங்க 3 விக்கெட்டுகளையும் லஹிரு குமார 2 விக்கெட்டுகளையும் கசுன் ராஜித மற்றும் தனஞ்சய டி சில்வா ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 145 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கிப் பதிலுக்கு இலங்கை அணி 18.3 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் இலங்கை கிரிக்கெட் அணி 6 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக தனஞ்சய டி சில்வா ஆட்டமிழக்காது 66 ஓட்டங்களையும் குசல் மெண்டிஸ் 25 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

ஆப்கானிஸ்தான் அணியின் பந்துவீச்சில் முஜிப் உர் ரஹ்மான் மற்றும் ரஷித் கான் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக பந்துவீச்சில் 3 விக்கெட்டுகளை வீழ்த்திய வனிந்து ஹசரங்க தெரிவு செய்யப்பட்டார். (4)





அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான 20 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான தேசிய மட்ட கபடிப் போட்டியில் கிளிநொச்சி உருத்திரபுரம் மகா வித்தியாலய அணி சம்பியன் கிண்ணத்தையும் கிளிநொச்சி கோணாவில் மகா வித்தியாலய அணி வெள்ளிப் பதக்கத்தையும் சுவீகரித்து தேசிய மட்டத்தில் சாதனையைப் பதிவு செய்துள்ளனர். (படங்கள்-கனகராஜா)




யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் வலிகாமம வலய B பிரிவு அணிகளுக்கான போட்டியில் அளவெட்டி மத்தி அணி சம்பியன் வென்றது.





### ரிகாஷி




### சுதர்சன்




### நகேஷ்




### திருஷ்யா




### நதீஷ்




### துஷியா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜோன்ஸ்டன் உள்ளிட்ட மூவருக்கு எதிரான வழக்குகள் நீதிமன்றால் நிராகரிப்பு



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ உள்ளிட்ட மூவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மூன்று வழக்குகளை நிராகரித்து, பிரதிவாதிகளை விடுவிக்குமாறு கோரி பிரதிவாதிகள் முன்வைத்த ஆரம்ப ஆட்சேபனைகள் தொடர்பில் எழுத்துமூல அறிக்கையை தாக்கல் செய்யுமாறு இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ வர்த்தக அமைச்சராக இருந்தபோது, சதொச ஊழியர் குழுவை பணியிலிருந்து நீக்கி அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்து அரசாங்கத்துக்கு நஷ்டத்தை ஏற்படுத்தியதாக முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ உள்ளிட்ட மூன்று பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)

# லொறி-மோட்டார் சைக்கிள் மோதி விபத்து

## இளைஞன் உயிரிழப்பு

(கொழும்பு)

கடுகண்ணாவ பிரதேசத்தில் கொழும்பு - கண்டி பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கடுகண்ணாவ பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட கொழும்பு-கண்டி பிரதான வீதியின் கடுகண்ணாவ, ஹெனவல பிரதேசத்தில் பிலிமந்தலாவயிலிருந்து கடுகண்ணாவை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது குறித்த மோட்டார் சைக்கிள் கடுகண்ணாவையில் இருந்து பிலிமத்தலாவ நோக்கி பயணித்து கொண்டிருந்த லொறி ஒன்றுடன் மோதி விபத்து இடம் பெற்றுள்ளது.

இதன் போது பலத்த காயமடைந்த மோட்டார் சைக்கிள் செலுத்திய நபர் ஹெனாவெ, கலன்பிந்துனுவெவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் 19 வயதுடைய மாகெஹெவல பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவராவர்.

பிரேத பரிசோதனைகளுக்காக சடலம் ஹெனாவெல மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்து தொடர்பில் லொறி சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கலெபிந்துவெள பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ந)


கண்ணீர் அஞ்சலி



அமரர். தாமோதரம்பிள்ளை லோகேஸ்வரன்
(வீரமலை)

புங்குடுதீவு 10ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் புங்குடுதீவு 3ம் வட்டாரம், 201 காலி வீதி, கொள்ளுப்பிட்டி மற்றும் வெள்ளவத்தை W.A சில்வா மாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை லோகேஸ்வரன் அவர்கள் காலமான செய்தியறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரின் குடும்பத்தின்ருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிரிவால் துயருறும்
சி.க.இலட்சுமணன் குடும்பம் – புங்குடுதீவு

(சி-5196)



கண்ணீர் அஞ்சலி

எமது சக நண்பன் திரு.க.உமாகாந் அவர்களின் அன்புத் தந்தை

அமரர். குமாரசாமி கனகலிங்கம்



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆழ்ந்த துயரத்துடன்
யாழ்ப்பாண மருத்துவ பிரதிநிதிகள் சங்கம்.

(03323)


# இராசிபலன்

02.11.2022
ஐப்பசி 16, புதன்கிழமை
நவமி முன்னிரவு 11.22 மணிவரை

அவிட்டம் பின்னிரவு 4.13 மணிவரை
சுபநேரம் 4.34-6.04 மணிவரை
இராகுகாலம் 12.04-1.34 மணிவரை

சந்திராஷ்டமம்
பூசம்

வளவன்

**மேஷம்**: தொலைதூரத்திலிருந்து சுபசெய்திகள் வந்து சேரலாம், புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ் கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்**: எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பொருளாதார நிலையில் திருப்தியுண்டு, திடீரென்று பயணங்கள் இடம்பெறலாம், எளிதில் உணர்ச்சி வசப்படுவதை தவிர்ப்பது நல்லது.

**துலாம்**: தாய்வழி உறவில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**மகரம்**: ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, வியாபார நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வழிபாட்டால் மகத்துவம் காணும் நாள்.

**ரிஷபம்**: எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், ரோக பயமுண்டு, திடீர் பயணங்கள் இடம்பெறலாம், தந்தை வழி உறவில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**சிம்மம்**: வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், மறைமுகப் போட்டிகள் மாறும், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், நன்மைகள் நாடி வரும் நாள்.

**விருச்சிகம்**: பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், விருந்தினர் வருகையுண்டு, காரிய அனுகூலமுண்டு, தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

**கும்பம்**: பணப்பற்றாக்குறை ஏற்படலாம், குடும்பப் பெரியவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், சயன சுகக் குறைவான நாள்.

**மிதுனம்**: எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை, தொழிலில் பொறுப்புக்கள் அதிகரிக்கும் வாய்ப்புண்டு, பிரயாண பயமுண்டு.

**கன்னி**: எதிர்பார்த்த தனவரவுகள் வந்து சேரலாம், நட்பு வட்டம் விரிவடையும் நாள், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம்.

**தனுசு**: குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வாக்கு மேன்மையுண்டு.

**மீனம்**: ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பயணங்கள் விரும்பிய படியே கைகூடும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயமான கோபத்தை வீணாகச் செலவழித்து விடாதே.

## கார்த்திகை மாத மரநடுகை

# தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவை குளிரச் செய்யும் செயற்பாடு

### ஐங்கரநேசன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**கார்த்திகையில் மரங்களை நடுகை செய்தல் தேசத்தைக் குளிரச்செய்யும் சூழலியற் செயல் மாத்திரமல்ல அது தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும் ஒரு தேசிய செயற்பாடும் ஆகும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.**



2014 ஆம் ஆண்டு முதல் கார்த்திகை மாதம் வடமாகாண மரநடுகை மாதமாக கடைப்பிடிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டு பொ. ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது பூமி சூடேறி வருவதால் காலநிலையில் படுபாதகமான மாற்றங்கள் ஏற்படத் தொடங்கியுள்ளன. கடும் வரட்சி,காலம் தப்பிய பெருமழை, வேகமெடுக்கும் சூறாவளிகள், கடல்மட்ட உயர்வு, உயிரினங்களின் அழிவு என்று காலநிலை மாற்றத்தின் விளைவுகளை நாம் தற்போது அனுபவிக்கத் தொடங்கியுள்ளோம்.

இதனால் வெப்பநிலை அதிகரிப்புக்குக் காரணமான கரியமில வாயுவை உறிஞ்சி அகற்றுவதற்கு மரங்களின் நடுகையை ஒரு பேரியக்கமாக முன்னெடுக்க வேண்டிய கட்டாய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

ஈழத்தமிழர்களின் வாழ்வியலிலும் கார்த்திகை மாதம் தனித்துவமான இன்னுமொரு சிறப்பினைக் கொண்டுள்ளது. இம்மாதத்திலேயே மண்ணுக்காக மரணித்த மறவர்களைக் கூட்டாக நினைவிற்கொள்ளும் நாள் அடங்குகிறது.

மரவழிபாட்டைத் தமது தொல் வழிபாட்டுமுறையாகக் கொண்ட தமிழர்கள் இறந்தவர்களின் நினைவாக மரங்களை நடுகை செய்து அவற்றை உயிருள்ள நினைவுச் சின்னங்களாகப் போற்றிய பண்பாட்டு மரபைக் கொண்டிருக்கின்றனர்.

எனவே தமிழ் மக்கள் கார்த்திகை மரநடுகையை ஒரு சூழல் பேண் நடவடிக்கையாக மாத்திரமல்லாது உணர்வெழுச்சியுடன் கூடிய ஒரு தமிழ்த்தேசியச் செயற்பாடாகவும் கொண்டாட வேண்டியது அவசியமாகும்.

வருடத்தில் எத்தனையோ நாட்களில் நாம் பொங்கி அமுதுண்டாலும் இயற்கையைப் போற்றி வழிபடுகின்ற தைப் பொங்கலே தமிழர்களின்தேசியப் பொங்கல் திருநாளாகப் கொண்டாடப்படுகின்றது. அதேபோன்று வருடத்தில் எல்லா நாட்களிலும் மரங்களை நடுகை செய்ய இயலுமெனினும் கார்த்திகை மாத மர நடுகையே தமிழர்களின் தேசிய அடையாளத்துடன் கூடியதாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)



வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் நல்லையம்பதி அலங்காரக் கந்தன் தேவஸ்தானத்தின் திருக்கல்யாண வைபவம் நேற்று முன்தினம் மாலை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படம்- கஜிந்தன்)



காரைநகர் பிரதேச சபையின் ஏற்பாட்டில் வடமாகாண மரநடுகை மாதத்தினை முன்னிட்டு நேற்று பிரதேச சபைத் தவிசாளர் க.பாலச்சந்திரன் தலைமையில் பிரதேச சபை வளாகம் மற்றும் காரைநகர் முகப்பு வளைவு ஆகிய இடங்களிலும் நிழல் தரும் மரங்கள் நாட்டி வைக்கப்பட்டன.

## தொடர் மழை

# 11 குடும்பங்கள் யாழில் இடப்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட 11 குடும்பங்கள் தொடர் மழையினால் பாதிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்களாக பெய்து வரும் தொடர்ச்சியான மழை காரணமாக 11 குடும்பங்களைச் சேர்ந்த 32 பேர் தமது இருப்பிடங்களை விட்டு காக்கைதீவு மீனவ சங்க கட்டடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தங்க வைக்கப்பட்டுள்ளவர்களில் சிறுவர்கள் மற்றும் பெண்களும் உள்ளடங்குவதுடன் இவர்களின் வீடுகளுக்குள் வெள்ளநீர் புகுந்ததால் தொடர்ந்து வசிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (4-104)

# ஈழத்துச் சினிமாவை உலகத்தர சினிமாவாக மாற்ற முடியும்

### யாழ்.மாநகர முதல்வர் மணிவண்ணன்



(யாழ்ப்பாணம்)

ஈழத்து சினிமா தன்னுடைய பாதையிலே சரியாகச் செல்லத் தொடங்கியிருக்கிறது என்றே எண்ணத் தோன்றுகின்றது. அதனால் இங்கிருந்தும் உலகத்தரத்திற்கு சினிமாவை உருவாக்க முடியும் என தான் நம்புவதாக யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

யாழ். தந்தை செல்வா கலையரங்கில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஈழத்து சினிமா கலைஞர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வான 'குவியம் விருதுகள் 2022' இல் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், 'நான் பெரிதாக சினிமா பார்ப்பது கிடையாது. இங்கு இன்று திரையிடப்படும் காட்சிகளைப் பார்க்கும் போது இந்த மண்ணிலே கமலஹாசன்களும் ஏ.ஆர்.ரஹ்மான்களும் பிரபுதேவாக்களும் பிறந்து விட்டார்கள் என எண்ணத் தோன்றுகின்றது. மிகவும் பிரமிப்பாக இருக்கின்றது.

உண்மையிலேயே ஈழத்து சினிமா தன்னுடைய பாதையிலே சரியாகச் செல்லத் தொடங்கியிருக்கின்றது-என்று தான் நான் நினைக்கின்றேன்.

சினிமா மீதான பற்றுக் காரணமாகவும் ஆர்வம் காரணமாகவும் நீங்கள் இந்த செயற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தாலும் இதன் மூலம் பெரியளவில் வருமானம் ஈட்ட முடியாது.

எதிர்காலத்திலே வர்த்தக ரீதியான சினிமாவையும் இங்கு உருவாக்க வேண்டும். ஈழத்தில் இருந்தும் தமிழ் சினிமாவை உலகத்தரத்திற்கு உருவாக்க முடியும்என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது. நம்பிக்கையோடுபோராடுங்கள். நிச்சயம் சிகரம் தொடுவீர்கள் எனத் தெரிவித்தார். (4-104-33)

## நினைவுப் பேருரையும் மரம்நாட்டு விழாவும்

(யாழ்ப்பாணம்)

அமரர். கலாநிதி. க.கனகராசாவின் 95 ஆவது அகவை நாளும் நினைவுப் பேருரையும் யாழ். மாவட்ட சாரணர் சங்கத்தின் மரம் நாட்டு விழாவும் இன்று புதன் கிழமை யாழ். பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் பி.ப 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளன. (4)



ஆசாதி கா அம்ரித் மஹோற்சவ் கொண்டாட்டங்களின் பகுதியாக இந்தியாவின் இரும்பு மனிதர் என போற்றப்படும் சர்தார் வல்லபாய் படேலின் பிறந்தநாள் நேற்று முன்தினம் யாழ். இந்திய துணைத் தூதரகத்தால் கொண்டாடப்பட்டது. இதன்போது யாழ்ப்பாணம் கலாசார மண்டபத்தில் பட்டேலின் கண்காட்சியை யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ், யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணன் மற்றும் ஓய்வு பெற்ற பேராசிரியர் சிவலிங்கராஜா ஆகியோர் திறந்து வைத்து பார்வையிட்டனர். (படங்கள் -சிவசாந்தன்- கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மருந்துப் பொருட்களின் விலைகள் மூன்று மடங்காக உயர்வு

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் சில வகை மருந்துப் பொருட்களின் விலைகள் மூன்று மடங்காக உயர்வடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே இறக்குமதி செய்யப்படும் மருந்து வகைகளுக்கு விலைப் பொறிமுறை அறிமுகம் செய்யப்பட வேண்டுமென தனியார் மருந்தக உரிமையாளர் சங்கத்தின் தலைவர் சந்தன கல்கந்த கோரியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், விலைச்சூத்திரம் ஔடதக் கட்டுப்பாட்டு சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இது குறித்து அதிகாரிகளை தெளிவுபடுத்திய போதிலும் சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை.

தற்போது மருந்துகளின் பெயர் களினால் அடையாளப்படுத்தப்படும் 1200 மருந்து வகைகள் காணப் பட்டாலும் 100 மருந்து வகைகள் மட்டுமே விலைப் பொறிமுறைமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

அரசாங்கம் அனுமதி வழங்கியதன் அடிப்படையில் முறை 29 மற்றும் 40 வீதம் என மருந்துப் பொருட்களின் விலைகள் உயர்வடைந்திருந்தன.

எனினும் சில மருந்து வகைகளுக்கு விலைப்பொறிமுறைமை இல்லாத காரணத்தினால் உயர்வடைந்துள்ளது.

இறக்குமதியாளர், மொத்த வியாபாரி மற்றும் சில்லறை வியாபாரி ஆகிய தரப்பினரின் இணக்கப்பாட்டுடன் விலைப் பொறிமுறைமை அறிமுகம் செய்யப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார். (நி)

# இம்மாத இறுதிக்குள் சீனாவில் இருந்து டீசல்

## நாட்டை வந்தடையும் என்கிறார் காஞ்சன



(கொழும்பு)

சீனாவில் இருந்து ஒரு தொகுதி டீசல் இம்மாத இறுதிக்குள் நாட்டிற்கு வரவுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

அபுதாபியில் நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொண்ட போதே, அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை தற்போது எதிர்நோக்கி வரும் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் வகையில் ஏதேனும் உதவிகள் கிடைத்துள்ளதா என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையானது பத்து மாதங்கள் மிகவும் நெருக்கடியான காலத்தை கழித்ததாகவும் அதன் காரணமாகவே எரிசக்தி துறையில் நெருக்கடி ஏற்பட்டதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அதனூடாக வாய்ப்புகள் உருவாக்கப்பட்டதாகக் குறிப்பிட்ட அமைச்சர் காஞ்சன விஜேசேகர, தனியார் விநியோகஸ்தர்களுக்கு இத்துறையில் பிரவேசிப்பதற்கான சட்ட மற்றும் கொள்கை கட்டமைப்புகள் திருத்தியமைக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

மேலும் 2030 ஆம் ஆண்டுக்குள் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் 70 சதவீதமாக உயரும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (நி)

# வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களுக்கு அமெரிக்க டொலரில் வீடு விற்பனை

## 3 வீடுகளுக்கு 43,700 டொலர்கள் இலாபம்

(கொழும்பு)

இலங்கையில் உள்ள வீடுகளை அமெரிக்க டொலர்களுக்கு விற்பனை செய்யும் வேலைத் திட்டத்தின் கீழ் வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களுக்கு 3 வீடுகளை விற்பனை செய்து 43,700 அமெரிக்க டொலர்களை அரசாங்கம் வருமானமாக ஈட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பன்னிபிட்டிய - வியாட்புர, கொட்டாவ மற்றும் மாலம்பே பிரதேசங்களில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான வீட்டுத் தொகுதிகளில் இந்த வீடுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

மேலும் 10 வீடுகளை வாங்க வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் விண்ணப்பங்களை அனுப்பியுள்ளனர். அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, ஐக்கிய அரபு இராச்சியம், பிரித்தானியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் இருந்து இலங்கையர்களால் விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளன. (நி)

# நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரது ஆதரவும் அவசியம்

## வஜிர அபேவர்த்தன அழைப்பு

(கொழும்பு)

இந்த நாட்டை கட்டியெழுப்பு வதற்கு அனைவரது ஆதரவும் அவசியம் என்பதனால் கட்சி பேதமின்றி அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என வஜிர அபேவர்த்தன அழைப்பு விடுத் தார்.

சிறிகொத்தவில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே வஜிர அபேவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுதந்திரத்தின் பின்னர் நாட்டை கட்டியெழுப்புவதற்கு பதிலாக தமது நோக்கங்களுக்காக வேறுபட்டு செயற்பட்டமையினாலேயே நாடு அராஜக நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

சிங்கப்பூர், ஜப்பான் போன்ற நாடுகள் இந்த அடிப்படை உரி மைகளுக்கு சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளதால் அந்த நாடுகள் வளர்ச்சியடைந்துள்ளதாகவும் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார். (நி)

# எல்ல பகுதியில் மின்னல் தாக்கம் ஒருவர் காயம்; இரண்டு வீடுகள் சேதம்



(பண்டாரவளை)

பண்டாரவளை - எல்ல பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட குருந்துவத்தை பகுதியில் நேற்று முன்தினம் மின்னல் தாக்கத்திற்கு இலக்காகி ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், இரண்டு குடியிருப்புகளுக்கு பகுதியளவில் சேதம் ஏற்பட்டுள்ளது.

இதன்போது, குறித்த வீடுகளில் உள்ள பெறுமதிமிக்க மின்சாதனப்பொருட்கள் சேதமடைந்துள்ளதோடு வீட்டு மின் இணைப்புக்களும் வீட்டு உடைமைகளும் சேதமடைந்துள்ளன. அத்தோடு வீட்டின் சுவர்களும் முற்றாக சேதமடைந்துள்ளன. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1991 இந்து<br>நட்சத்திரம்:அத்தம் 3<br>கி.பா:10 ½ சூரி 3 செவ் 7 இல்<br>உயரம்:5' 5"<br>தகைமை/தொழில்: Civil Engineer<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி<br>தொ.இ: B/13089 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மகம் 4<br>கி.பா: சூரி 7 செவ் 9 இல்<br>தகைமை/தொழில்:A/L சுகாதார உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ:G/10930 |
| பிறப்பு:1991 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 2<br>கி.பா: சூரி 1 செவ் 2 இல்<br>உயரம்:5' 11"<br>தகைமை/தொழில்: HND,TO (அரசதொழில்)<br>எதிர்பார்ப்பு:அரச, தனியார் உத்தியோகம் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/13090 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்:பரணி 4<br>கி.பா:-46 ¾ சூரி. செவ் 4 இல்<br>உயரம்:5' 6"<br>தகைமை/தொழில்:MSc அரச உத்தியோகம்<br>எதிர்பார்ப்பு:தகுந்த வரன் சைவபோசனம் மட்டும்<br>தொ.இ:G/10931 |
| பிறப்பு:1985 இந்து<br>நட்சத்திரம்:பூரம் 3<br>கி.பா:-28 சூரி. செவ் 10 இல்<br>உயரம்: 5' 4"<br>தகைமை/தொழில்:MBBS,MD வைத்தியர்<br>எதிர்பார்ப்பு:படித்தபெண்<br>தொ.இ: B/13093 | பிறப்பு:1985 இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை 2<br>கி.பா:44 சூரி. செவ் 1 இல்<br>உயரம்: 155 cm<br>தகைமை/தொழில்:BBAஅரச வங்கி முகாமையாளர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச. தனியார் உத்தியோகம்<br>தொ.இ:G/10946 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 3<br>கி.பா:சூரி 3 செவ் 1 இல்<br>உயரம்:155 cm<br>தகைமை/தொழில்:TO (அரச தொழில்)<br>எதிர்பார்ப்பு:நிரந்தர தொழில்<br>தொ.இ: B/13096 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 4<br>கி.பா:சூரி 5 செவ் 2 இல்<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/10949 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யாவின் தொடர் தாக்குதல்களால் இருளில் மூழ்கிய உக்ரைன்

(கீவ்)

**உக்ரைன் தலைநகர் கீவ் உட்பட நாடு முழுவதும் ரஷ்யா பாரிய ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியதால் மின்சாரம் மற்றும் தண்ணீர் துண்டிக்கப்பட்டுள்ளதாக உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**

தலைநகர் கீவ்வில் இரண்டு குண்டுவெடிப்புகள் பதிவாகியுள்ளன. வடகிழக்கு நகரமான கார்கிவில் முக்கியமான உட்கட்டமைப்பு வசதிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ரஷ்யாவுடன் இணைக்கப்பட்ட கிரிமியாவில் அதன் கருங்கடல் கடற்படை மீது ஆளில்லா விமானத் தாக்குதல் நடத்தியதற்கு உக்ரைன் மீது ரஷ்யா குற்றம் சாட்டியதைத் தொடர்ந்து இந்தத் தாக்குதல்கள் நடந்துள்ளன.

நேற்று முன்தினம் மத்திய வின்னிட்சியா பகுதியிலும் தென்கிழக்கில் டினிப்ரோபெட்ரோவ்ஸ்க் மற்றும் ஸபோரிஸியாவிலும் மேற்கு உக்ரைனில் உள்ள லிவிவிலும் ஏவுகணை தாக்குதல்கள் பதிவாகியுள்ளன.

ஸபோரிஸியா பகுதியில் உள்ள டினிப்ரோ நீர்மின் நிலையத்திலும் ஒரு பகுதி பாதிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. தலைநகர் கீவ்வில் 350,000 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு மின்சாரம் வழங்கும் வசதி சேதமடைந்தது.

மேலும் ஏவுகணைத் தாக்குதல்கள் தொடரலாம் என்ற அச்சத்தின் மத்தியில், தாக்குதலுக்கு உள்ளான பிராந்தியங்களில் வசிப்பவர்கள் தங்குமிடங்களில் இருக்குமாறு வலியுறுத்தப்பட்டனர். (நி)

# சுவிட்சர்லாந்தில் உலகின் மிக நீளமான பயணிகள் ரயில் சேவை



(ஜெனிவா)

உலகின் மிக நீளமான பயணிகள்ரயில்சேவையை சுவிஸ் ரயில்வே நிறுவனம் கடந்த சனிக்கிழமை இயக்கியுள்ளது.

ஆல்ப்ஸ் மலையோரம் அமைந்துள்ள பிரெடா முதல் பெர்குவென் வரை உள்ள அல்புலா/பெர்னினா பாதையில் ரெசின் ரயில்வே நிறுவனம் 1.9 கிலோமீற்றர் நீளமுள்ள (1.2 மைல் நீளம்) ரயிலில் 100 பெட்டிகளை இணைத்து இயக்கி உள்ளது.

இந்தப் பாதை 2008 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ உலக பாரம்பரியமாக அறிவிக்கப்பட்டது. இந்த பாதை 22 சுரங்கங்கள் வழியாக செல்கிறது. அவற்றில் சில மலைகள் வழியாகவும் வளைந்த சுண்ணாம்புப் பாலங்கள் உட்பட 48 பாலங்கள் வழியாகவும் செல்கிறது.

சுமார் 25 கிலோமீற்றர்கள் (15.5 மைல்கள்) தூரம் செல்லும் முழு பயணம் முடிய ஒரு மணி நேரத்திற்கு மேல் ஆகிறது. 25 பிரிவுகள் கொண்டு ஆல்ப்ஸ் மலைகள் வழியாக செல்லும் இந்தப் பாதையில் ரயில் பயண ஆர்வலர்கள் பலர் ஆர்வத்துடன் பங்கேற்றுள்ளனர். (நி)

# இம்ரான் கான் பயணித்த வாகனத்தில் சிக்கி ஊடகவியலாளர் தலை நசுங்கிப் பலி

(இஸ்லாமாபாத்)



பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் பேரணியில் செய்தி சேகரித்துக் கொண்டிருந்த ஊடகவியலாளரான பெண்ணொருவர், கனரக வாகனமொன்றினால் தலை நசுங்கி உயிரிழந்துள்ளார்.

சதாஃப் நயீம் எனும் 40 வயதான ஊடகவியலாளரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குஜ்ரன்வாலா மாவட்டத்தின் சதோக் நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பி.ரி.ஐ கட்சியின் தலைவரான முன்னாள் பிரதமர் இம்ரான் கான், லாகூர் நகரிலிருந்து தலைநகர் இஸ்லாமாபாத்தை நோக்கி நீண்ட அணிவகுப்பு எனும் பேரணியை நடத்தி வருகிறார்.

இம்ரான்கானின் குரல் பதிவொன்றை பெறுவதற்காக கொள்கலன் வாகனத்தில் ஊடகவியலாளர் சதாஃப் நயீம் ஏற முயன்ற நிலையில் தவறி வீழ்ந்தார் எனவும் அதன்பின் அவரின் தலை மீது வாகனத்தின் சக்கரம் ஏறியதாகவும் பாகிஸ்தான் ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (நி)

# கருங்கடல் தானிய ஏற்றுமதி ஒப்பந்தத்திலிருந்து புடின் விலகல்



(மொஸ்கோ)

உக்ரைனிய தானிய ஏற்றுமதிகளை ஏற்றிச் செல்லும் கப்பல்களை பாதுகாப்பான பாதையில் செல்ல அனுமதிக்கும் ஒப்பந்தத்தில் தற்காலிகமாக விலகுவதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அறிவித்துள்ளார்.

எனினும், இந்த ஒப்பந்தத்திலிருந்து முழுமையாக விலகவில்லை என்று அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

உக்ரைன் தனது கடற்படையைத் தாக்க கருங்கடலில் ஒரு பாதுகாப்பு வழித்தடத்தை பயன்படுத்தியதாக குற்றம் சாட்டி, ஐ.நா வின் தரகு ஒப்பந்தத்தில் இருந்து ரஷ்யா கடந்த சனிக்கிழமை வெளியேறியது.

ஆனால், இந்தத் தாக்குதலுக்கு உக்ரைன் பொறுப்பேற்கவில்லை.

உக்ரைனிய ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலென்ஸ்கி, ரஷ்யா உலகத்தை பசியால் அச்சுறுத்துகிறது என்று குற்றம் சாட்டினார்.

வீழ்ச்சி இருந்தபோதிலும், தானியங்கள் உட்பட 354,500 தொன் உணவுகளைக் கொண்ட 12 கப்பல்கள் நேற்று முன்தினம் திங்களன்று உக்ரைனின் கருங்கடல் துறைமுகங்களை விட்டு வெளியேறியதாக உக்ரைனின் உட்கட்டமைப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

40,000 தொன் தானியங்களை ஏற்றிச் செல்லும் கப்பல்களில் ஒன்று வெகுஜன பட்டினிக்கான உண்மையான சாத்தியம் கொண்ட எத்தியோப்பியாவிற்கு அனுப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இசை நிகழ்ச்சியில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 11 பேர் உயிரிழப்பு



(கின்ஷாரா)

மத்திய ஆப்பிரிக்க நாடான கொங்கோ ஜனநாயகக் குடியரசில் இசைநிகழ்ச்சிஒன்றின்போது ஏற்பட்ட சனக் கூட்ட நெரிசலில் சிக்கி 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

கொங்கோ தலைநகர் கின்ஷாசாவில் உள்ள தியாகிகள் அரங்கத்தில் இசை நிகழ்ச்சிக்காக 80 ஆயிரத்திற்கும் அதிகமானோர் குவிந்தனர்.

அதில் இரசிகர்கள் பலர் விஜபி இருக்கைகள் மற்றும் முன்பதிவு செய்யப்பட்ட இருக்கைகளில் முண்டியடித்துக் கொண்டு போய் அமர்ந்தனர்.

80 ஆயிரம் பேர் அமரும் அரங்கில் அதை விட அதிகமானோர் குவிந்ததால் தள்ளு முள்ளு ஏற்பட்டதோடு, அரங்கத்திற்கு வெளியேயும் நீண்ட வரிசையில் பலர் காத்துக்கிடந்தனர்.

இதன்போது அரங்கத்திற்கு வெளியே இருந்த கட்டுக்கடங்காத கூட்டத்தை கலைக்க பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டுகளை வீசியதில் 2 பொலிஸார் உட்பட 11 பேர் உயிரிழந்ததுடன், 7 பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# ஓமம்

**Botanical Name- Carum copticum**
**Family- Umbelliferae**

இது ஒரு பூக்கும் ஒரு வித்திலைத் தாவரம். செடி வகையானது. நுண்மயிர் இலைகளிலும் தண்டுகளிலும் காணப்படும். குளிர்ந்த நிலப்பரப்பில் வளரக்கூடியது. 1-3 அடி நேராக தழைத்து வளரும். சிற்றிலைகளும் இலையடி செதிலும் இருக்கும். சிறந்த மருத்துவச் செடியாகும். இலங்கையில் வளரக்கூடிய வளம் இல்லாவிட்டாலும் ஓமம் உலர் கனியாக மருந்துகளிலும் உணவுக் கூறுகளிலும் சேர்க்கப்படுகிறது.

உணவுப் பண்டங்களின் தயாரிப்பிலும் மருத்துவ நோக்கிலும் ஓமம் சிறந்த முறையில் பயன்படுத்தக் கூடியது. ஓமம் பல வகையான ஊட்டச்சத்துக்களைக் கொண்டது. புரதம், காபோவைதரேற்று, கொழுப்பு, தாது உப்புக்கள் அனைத்துமே ஓமத்தில் தேவையான அளவு பொதிந்து இருக்கிறது. தாது உப்புக்களில் சிறப்பாக கல்சியம், இரும்புச்சத்து ஆகியவை ஓமத்தில் மிகுதியாக உள்ளன. குழந்தைகள் வாழும் இல்லங்கள் தோறும் ஓமம் கட்டாயமாக சேமித்து வைத்தல் அவசியமாகும்.

ஓமத்தில் 8 கிராம் எடுத்து



100 மில்லி வெந்நீரில் இரவு முழுவதும் ஊறவைத்து மறுநாள் காலை அந்தத் தண்ணீரை மட்டும் குடித்து வந்தால் நன்றாகப் பசி எடுக்கும்.

வாய்வு சம்பந்தமான கோளாறுகள் ஏற்பட்டால் ஓமத்தை பொடி செய்து சம அளவு சீனி சேர்த்து உட்கொள்ள உடனடி நிவாரணம் கிடைக்கும். 1-2 கிராம் அளவு உள்ளெடுக்கலாம். ஜீரண உறுப்புக்களில் கோளாறுகள் இருந்தாலும் இதனைப் பயன்படுத்தலாம்.

ஓமத்தை தூய்மைப்படுத்தி ஒரு பங்கிற்கு 4 பங்கு நீர்விட்டு 1/4 பங்காக குடிநீர் காய்ச்சி மிதமான சூட்டில் தொடர்ந்து குடித்து வந்தால் ஆஸ்துமா நோயாளிக்கு ஏற்படும் மூச்சுத்திணறல்



குணமாகும்.

உண்ட உணவு சரியாக ஜீரணமாகாத நிலை, வயிற்றுவலி, பசியின்மை, வாய்வுத் தொல்லைகள் போன்றவற்றுக்கு மிளகு, உப்புடன் ஓமத்தை சேர்த்து பொடி செய்து உட்கொள்ள உடனடி நிவாரணம் கிடைக்கும்.

ஓமம், ஏலக்காய், சாதிக்காய், ஆகியவற்றை ஒரே அளவு எடுத்து தாய்ப்பாலுடன் சேர்த்து சிறுவர்களுக்கு கொடுக்க வயிற்றுப்பிணிகள் அகலும்.

உடற் சூடு குறைந்து உடல் குளிர்ச்சி அடைந்தால் உடற் சூட்டை சமநிலைக்கு கொண்டு வர ஓமம், கற்பூரம், கறிமஞ்சள் ஆகிய இம் மூன்று சரக்குகளையும் சம அளவு எடுத்து தூள் செய்து குளிர்ந்த உடலில் இத்தூளை உடல் முழுவதும் வைத்து தேய்த்து விட உடற் சூடு இயல்பு நிலைக்கு வரும்.

ஓமம், தோல் நீக்கிய இஞ்சி இரண்டையும் சம அளவு எடுத்து ஒன்றாக அரைத்து 5 கிராம் அளவு காலையில் வெறும் வயிற்றில் எடுத்து வர குடற் கிருமிகள் அனைத்தும் அழியும்.

ஓமம், அறுகம் புல் இரண்டும் சம அளவு எடுத்து குடிநீர் காய்ச்சி 30-60 மில்லி அளவு காலை, மாலை எடுத்து வர குடற்புண் ஆறும். ஓமத்தை இடித்து ஒரு மெல்லிய துணியில் சிறு மூட்டையாகக் கட்டி அடிக்கடி மூக்கில் வைத்து நுகர மூக்கடைப்பு, நீர்க்கோர்வை நீங்கும்.

ஓமத்தை பொன்வறுவலாக வறுத்து பொடித்து வெந்தயத்தையும் அதே அளவு எடுத்து பொன்நிறமாக வறுத்து பொடித்து இரண்டையும் கலந்து வைத்துக் கொள்ளவும். 8 கிராம் அளவு தேனில் காலை, மாலை கொடுக்க சீதப்பேதி, ஆசனக் கடுப்பு போன்ற நிலைமைகள் நீங்கும்.

ஓமம், திப்பிலி, ஆடதோடை இலை ஒவ்வொன்றும் 15 கிராம் எடுத்து வாய் குறுகிய பானையில் போட்டு 4 மடங்கிற்கு நீர் விட்டு 1/4 பங்காக வற்றக்காய்ச்சி 30-60 மில்லி அருந்த சளி இளகி வெளியேறும்.

ஓமத்தை நல்லெண்ணெயில் பொட்டுக் காய்ச்சி வடி கட்டி தலையில் தேய்த்து முழுகி வந்தால் நீர்க் கோர்வை, தலைப் பாரம் நீங்கும்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

கருஞ்சீரகம், வெந்தயம், ஓமம் மூன்றிலும் வெந்தயம் 250 கிராம், ஓமம் 100 கிராம், கருஞ்சீரகம் 50 கிராம் எடுத்து தனித்தனியாக மெல்லிய நெருப்பில் பொன்நிறமாக வறுத்து பொடித்து அரித்து வைத்துக் கொள்ளவும். ஒரு தேக்கரண்டி பொடியை எடுத்து 200 மில்லி அளவான சூடு உள்ள நீரில் கலந்து இரவில் எடுக்க வேண்டும். இரத்த ஓட்டம் சீராகி இரத்தத்தில் ஆமஇரத்தம் (இரத்தம் கட்டியாதல்) நீங்கும்.

பிற மருந்துகளின் பக்க விளைவுகளை நீக்கும். இதயம் சீராக இயங்கும். சருமத்தில் சுருக்கம் ஏற்பட விடாமல் தடுக்கும். என்புகளை பலப்படுத்தும் நீரிழிவையும் கட்டுப்படுத்தும்.

ஓமத்தை நீரில் கொதிக்க வைத்து அதனுடன் கருப்பட்டி சேர்த்து காலையில் அருந்த உடல் பலம் பெறும். தூக்கமின்மையும் நீக்கக்கூடியது.

# 'உலக வறுமை சுட்டி' சுட்டிநிற்கும் எம் தேசத்தின் நிலை!

**(சென்ற வார தொடர்ச்சி)**

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

ஆனால் கடந்த போகத்தில் உற்பத்தி விவசாய உள்ளீடுகளில் ஏற்பட்ட தளர்வு காரணமாக விவசாய பயிர்ச் செய்கை பாதிப்புக் குள்ளாகி இருந்ததால் இவ்வாண்டின் இறுதிப்பகுதியில் தட்டுபாடு அல்லது தளர்வு காணப்படுமென்ற ஊகத்தில் நியாயமிருக்கின்றது என்கின்றனர்.

எது நடந்தாலும் எவ்வகையிலாவது உணவுற்பத்தியை மேம்படுத்துவதற்கான வாய்ப்புக்களை விரைந்து செயற்படுத்த வேண்டும் என்பதுடன் எமது பிரதேசத்தில் தொழில் வளர்ச்சிக்கும் முன்னுரிமை கொடுக்கவேண்டிய கட்டாயத்தில் நமது அரசு இருக்கின்றதென்பதையும் நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். வேலையின்றி மக்கள் தவிக்கும் போது அவர்களுக்கான குடும்பச் செலவினை ஈடுகட்டுவதற்கான வாய்ப்புக்கள் சொற்பமே. தனியார் துறையின் அபிவிருத்திக்கான ஆரோக்கியமான செயற்பாடுகளில் அவசியம் நாம் கரிசனை செலுத்த வேண்டும். இதன் மூலம் மக்களுக்கான வேலைவாய்ப்பு, தரமான உற்பத்தி, வெளிநாடுகளில் விற்பனை செய்வதனால் எமது அந்நியச் செலாவணியை ஈட்டுதல் என்பன எமக்கு கிடைக்கும் அனுகூலங்களாகும்.

பசி பட்டினி என்பதற்கு அடிப்படைக் காரணங்களாக எமது மக்களினுடைய குடும்பங்களின் பணப்புழக்கம் அருகி வருதல், தமக்குத் தேவையான அடிப்படைப் பொருட்களை பெறமுடியாத இக்கட்டான நிலை, பொருளாதார வீழ்ச்சியினால் ஏற்படும் பொருட்களின் அதீத விலையதிகரிப்பு, அத்தியாவசியப் பொருட்கள் விலையதிகரிப்பினால் தேவையான இருப்பு இல்லாமை, சமனான ஊட்ட




ச்சத்தான உணவை உண்ணாமையினால் தேகம் மெலிந்து நோயெதிர்ப்பு சக்தியிழந்து தொற்றுநோய்களுக்கு இலகுவில் நோய்வாய்ப்படுதல், வேலையின்மை அதிலும் தனியார் துறையில் விற்பனை வழக்கமானதாக இல்லாது நலிவடைந்தமையினால் ஆட்களைக் குறைத்தல், சம்பளத்தைக் குறைத்தல், இவற்றுடன் சேர்த்து அவர்களுக்கான வரியை அறவிடும் செயன்முறை இவையனைத்தும் அனைவரையும் பாதிக்கின்றதென்றாலும் கர்ப்பிணிப்பெண்கள் மற்றும் குழந்தைகளை வெகுவாக இவை பாதித்திருக்கின்றன. நாம் சரியான முடிவுகளை இவ்வாறான இக்கட்டான நேரத்தில் எடுக்கத் தவறினால் நோயெதிர்ப்பற்ற வருங்கால சந்ததியை நாம் உருவாக்கும் நிலைக்குள் தள்ளப்பட்டுவிடுவோம் என்பதனை கருத்தில் கொள்ளல் அவசியம்.

தனிமனிதனுக்கான குடும்பத்திற்கான தேவைகளை ஓரளவிற்கு பூர்த்தி செய்யக் கூடியதான எளிதான பொறிமுறையே குடும்ப விவசாயம் (Family Farming) என அறிமுகப்படுத்தியிருக்கின்றனர். இதுவொன்றும் புதிதான நடைமுறையில்லை. எமது மூதாதையர் காலத்தின் கட்டாய் மறிந்து முன்னோக்கிய சிந்தனையுடன் செய்த செயன்முறைகளில் மாற்றங்களை சிறிதாக செய்து தற்போதைய இளைய தலைமுறைக்கு ஓர் ஊக்கசக்தியாக உணவுற்பத்தியில் ஈடுபடுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

கொடுக்கின்றனர். குடும்ப விவசாயத்தை பலவழிகளில் வரைவிலக்கணப்படுத்தினாலும் குடும்பத்திலுள்ள அனைத்து உறுப்பினர்களும் ஏதோவொரு வேலையினை அல்லது பணியை செய்து தமது குடும்பத்திற்கான அத்தியாவசிய சமனான ஊட்டச்சத்தான உணவை உற்பத்தி செய்யவும் மேலதிகமானதை விற்பனை செய்து வருமானமீட்டவும் இன்னும் நஞ்சற்ற உணவை உற்பத்தி செய்வதன் மூலம் சுற்றாடலை பாதுகாக்கவும் குடும்ப விவசாயம் வழிசெய்யும்.

குடும்ப விவசாயத்தின் முக்கியத்துவத்தை அனைவரும் புரிந்து கொள்வதற்கான அனைத்து தகவல் வழங்கல்களை ஏற்படுத்துதல் சிறந்தது. மேலும் குடும்ப விவசாயத்திற்கான உள்ளீடுகளை பெறுவதற்கான வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுத்தல் என்பதும் இங்கே முக்கியமானது. தகவல் தொழில்நுட்ப அறிவு (Information and Communication) வளர்ச்சி எமது தேசத்தில் நன்றாக இருக்கின்ற போது அதனை இளையவர்களை கொண்டு ஒரு பரிணாம வளர்ச்சியாகவே ஏற்படுத்திக் கொடுக்கலாம். இதன் மூலம் இளையவர்களுக்கான தொழிற்றுறையையும் இணைத்தே வளர்த்தெடுக்கலாம்.

(தொடரும்)



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓ.எம்.பி அலுவலக செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து உறவுகள் போராட்டம்

(கண்டாவளை)

**கிளிநொச்சியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நடமாடும் சேவை நடைபெற்ற இடத்தின் முன்பாக காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் (ஓ.எம்.பி) செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.**






போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அரசுக்கும் குறிப்பாக காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் செயற்பாடுகளுக்கும் எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலும் பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் மூலம் கடிதங்கள் கிடைக்கப் பெற்ற காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் குறித்த அலுவலகத்துக்கு பதிவுக்குச் சென்றபோது போராட்டத்தை வழி நடத்துபவர்களால் அவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டதையடுத்து பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்குமிடையில் முறுகல் ஏற்பட்டது.

பின்னர் விரும்பிய மக்கள் சென்று பதிவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டன. (4-315)



கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட விழாவோடை கிராமத்துக்குச் செல்லும் சேதமடைந்து காணப்பட்ட பாலம் மற்றும் பாதை என்பன இராணுவத்தினரால் தற்காலிகமாக புனரமைப்பு செய்யபபட்டுள்ளன. (படம்- யதுபாஸ்கரன்)

# யாழ்.பல்கலையில் உள்ள மாவீரர் நினைவுத்தூபியில் சிரமதானப்பணி முன்னெடுப்பு



(அராலி)

மாவீரர்களை நினைவுகூரும் கார்த்திகை மாதம் ஆரம்பமாகியுள்ள நிலையில் யாழ். பல்கலையில் அமையப்பெற்றுள்ள மாவீரர் நினைவுத்தூபி வளாகம், யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் நேற்று சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மாணவர்களால் மாவீரர் நினைவுத்தூபிக்கு ஆத்மார்த்த ரீதியாக மலரஞ்சலி செலுத்தப்பட்டது. அதிகளவான மாணவர்கள் இந்த நினைவேந்தலில் பங்கெடுத்தமை குறிப்பிடத்தக்கது. (4-104)

# கனகாம்பிகை குளத்தின் நீர்மட்டம் அதிகரிப்பு

## மக்களுக்கு எச்சரிக்கை

(தருமபுரம்)

கனகாம்பிகை குளத்தின் நீர்மட்டம் படிப்படியாக அதிகரித்து வருகின்றது. எனவே கனகாம்பிகை குளத்தின் கீழ்ப் பகுதியில் வசிக்கும் இரத்தின புரம்,ஆனந்தபுரம் மக்கள் மிக அவதானமாக இருக்குமாறு கிளிநொச்சி அனர்த்த முகாமைத்துவ பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

வெள்ளம் ஏற்படாத வகையில் அருகில் உள்ள கழிவுக் கால்வாய்களை சுத்தம் செய்து நீர் வழிந் தோடக்கூடிய வகையில் ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டுள்ளது.

தொடர்ச்சியாக மழை பெய்யும் ஆக இருந்தால் கனகாம்பிகை குளம் வான் பாய்வதற்கான சந்தர்ப்பங்கள் இருப்பதனால் பரந்தன் உமையாள்புரம் பகுதிகளில் வாழ்கின்ற மக்களும் அவதானமாக இருக்குமாறும் அறிவித்துள்ளது. (4-316)

# கழிவுகள் கொட்டப்படுவதால் பொதுமக்கள் சிரமம்



(அராலி)

யாழ்ப்பாணம் சோமசுந்தரம் வீதியையும் கோவில் வீதியையும் இணைக்கும் கோவில் ஒழுங்கை பகுதிகளில் விஷமிகள் கழிவுகளை வீசி வருவதனால் அப்பகுதியில் வசிக்கும் மக்கள் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

வீசப்படும் கழிவுகள் மழை வெள்ளத்தில் மிதந்து வீட்டு வளவுக்குள் வருவதனாலும் வீதிகளில் வெள்ளநீருடன் கழிவுகள் சிதறி காணப்படுவதானலும் இன்னல்களை எதிர் நோக்குகின்றதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (4-104)

# பசுவைக் கொன்று வயிற்றில் இருந்த கன்றுக்குட்டியை வீசிய விசமிகள்



(தருமபுரம்)

கிளிநொச்சி இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வட்டக்கச்சி பகுதியில் நேற்று முன்தினம் மேய்ச்சலுக்காக கட்டி விடப்பட்ட கால்நடையினை இறைச்சிக்காக கொன்று அதன் வயிற்றில் இருந்த கன்றுக்குட்டியினை எடுத்து வீசி விட்டுச் சென்ற சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இச்சம்பவம் தொடர்பாக இராமநாதபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய சந்தேகநபர்கள் நான்கு பேரையும் கால்நடையின் எச்சங்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

அத்துடன் சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக இராமநாதபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரி தெரிவித்துள்ளார். (4-316)



கிளிநொச்சியில் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் நடமாடும் சேவை நிகழ்ச்சித் திட்டம் கிளிநொச்சியில் அமைந்துள்ள திறன் விருத்தி வளாகத்தில் நேற்று நடைபெற்றுள்ளது. நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்று இரண்டாவது நாளாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

(படம்-யதுபாஸ்கரன்,தேவானந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகநூல் தரிசனம் 106

# உதவிய சிறுமிக்கு என்ன கைமாறு?



ஒரு தபால்காரன் கடிதம் கொடுப்பதற்காக ஒரு வீட்டின் கதவைத் தட்டினான். வருகிறேன் என்று உள்ளிருந்து குழந்தை ஒன்றின் குரல் கேட்டது.

கடிதம் கொடுக்க சில நிமிடங்கள் காத்திருந்து இறுதியாக, கோபமடைந்த தபால்காரன் வீட்டில் யாரும் இல்லையா? சீக்கிரம் வந்து கடிதத்தை வாங்கிக் கொள்ளுங்கள் என உரக்கச் சத்தமிட்டான். மீண்டும் அதே குரல். ஐயா, கடிதத்தை கதவுக்கு அடியில் வைக்கவும் நான் வருகிறேன் என்று சொல்லிக் கேட்டது.

தபால்காரன் "இது ஒரு பதிவு செய்யப்பட்ட கடிதம். அதற்கு ஒப்புதல் தேவை. எனவே நீங்கள் கையெ முத்திட வேண்டும்" என்றான். பத்து நிமிடங்களுக்குப் பிறகு கதவு திறந்ததும் கோபத்தில் இருந்த தபால்காரன் திகைத்துப் போனான்.

கடிதத்தைப் பெற கால் இல்லாத ஒரு சிறுமி அவன் முன் மண்டியிட்டு நிற்பதை பார்த்து விட்டு தபால்காரன் கடிதத்தை அமைதியாக கொடுத்துவிட்டு வருத்தத்துடன் திரும்பிச் சென்றான். இப்படியே நாட்கள் சென்றன. தபால்காரன் சிறுமியின் வீட்டிற்கு கடிதம் கொண்டுவரும் போதெல்லாம் கதவு திறக்கும் வரை காத்திருப்பது வழக்கம்.

தீபாவளி நெருங்கிக் கொண்டிருந்தது. தபால்காரன் எப்போதும் வெறுங்காலுடன் இருப்பதை அந்தச் சிறுமி கவனித்தாள். எனவே, ஒருமுறை தபால்காரன் பதவுத் தபாலை வழங்க வந்தபோது, அந்தச் சிறுமி அமைதியாக தரையில் உள்ள கால்தடங்களில் இருந்து தபால்காரரின் கால் அளவை அளந்தாள்.

தீபாவளிக்கு முன்பு, அந்தச் சிறுமியிடம் சென்ற வேளை "மாமா இது தீபாவளியன்று உங்களுக்கு நான் தரும் பரிசு" என்றாள். தபால்காரன் "நீ எனக்கு மகள் போன்றவள் உன்னிடம் இருந்து நான் எப்படி பரிசு வாங்க முடியும்?" என்றான். அந்தச் சிறுமி வற்புறுத்தியதால், தபால்காரன் வீட்டிற்கு எடுத்துச் சென்று அந்தப் பரிசினைத் திறந்த போது ஒரு ஜோடி காலணி இருந்தது.

அவரது கண்களில் கண்ணீர் நிரம்பியது. ஏனெனில் அவரது முழு சேவையின் போதும், அவர் வெறுங்காலுடன் இருப்பதை யாரும் கவனிக்க வில்லை. அடுத்த நாள், தபால்காரன் தனது தபால் நிலையத்திற்குச் சென்று தனது வேலையை வேறு பகுதிக்கு மாற்ற வேண்டும் என்று தபால் அதிகாரியிடம் கேட்டான்.

குறித்த அதிகாரி காரணம் கேட்டதும் கண்ணீருடன், "ஐயா இன்றைக்கு நான் வழமையாகப் போகும் தெருவுக்குப் போக முடியாது. அந்தச் சிறுமி என்னை வெறுங்காலுடன் பார்த்துக் காலணியைக் கொடுத்தாள். நான் எப்படி அவளுக்குக் கால் கொடுப்பேன்?" என மனவருத்தத்துடன் சொன்னான்.

**"மற்றவர்களின் வலி, அனுபவங்கள் மற்றும் அவர்களின் வலிகளைப் பகிர்ந்து கொள்ளும் நாங்கள் சக மனிதர்களிடமும் அனைத்து உயிர்களிடமும் கருணை காட்டுவோம்."**

# அமைச்சர்களின் வெளிநாட்டு பயணங்களுக்கு வரையறை

(கொழும்பு)

பாராளுமன்ற அமர்வுகள் நடைபெறும் நாட்கள் மற்றும் வரவு செலவுத்திட்ட விவாதம் இடம்பெறும் காலப்பகுதிகளில் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் அரச தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடு செல்வதற்கு வரையறுக்கப்பட்டுள்ளது.

பிரதமர் அமைச்சரவைக்கு முன்வைத்த யோசனைக்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, அவசர சிகிச்சை காரணமாகவோ அல்லது அரசாங்கத்தின் அவசர காரியங்கள் தவிர்த்து அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் அரச தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட ஆளும் தரப்பினர் வெளிநாடுகளுக்கு செல்வது வரையறுக்கப்பட்டுள்ளது. (நி)

# வரவு செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பை டிசெம்பர் 8 ஆம் திகதி நடத்தத் தீர்மானம்

(கொழும்பு)

2023 ஆம் நிதியாண்டு தொடர்பான வரவு செலவுத் திட்ட விவாதத்துக்கான உத்தேச வேலைத்திட்டத்தை பிரதமர் அமைச்சரவையில் முன்வைத்ததையடுத்து அதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நிகழ்ச்சித் திட்டத்தின் படி வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை எதிர்வரும் 14 ஆம் திகதி பாராளுமன்றில் சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதிவரை 7 நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

மேலும் வரவு செலவுத்திட்டம் மீதான குழுநிலை விவாதம் இம்மாதம் 23 ஆம் திகதி முதல் டிசெம்பர் 8 ஆம் திகதி வரை 13 நாட்களுக்கு நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பை டிசெம்பர் 8ஆம் திகதி நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நி)

# கடும் வரிச் சுமையை சுமத்தும் வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவில்லை

## ஐக்கிய மக்கள் சக்தி



(கொழும்பு)

பாராளுமன்றத்தில் அடுத்த வாரம் சமர்ப்பிக்கப்படவுள்ள 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் பொருளாதார மீட்சிக்கான வேலைத் திட்டங்களையும் மக்களுக்கான நிவாரணங்களையும் உள்ளடக்கியதாக தயாரிக்கப்பட வேண்டும். அவ்வாறில்லை எனில் அதனை ஆதரிக்க முடியாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தனாயக்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில், சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் இன்னும் பேச்சுவார்த்தை மட்டத்திலேயே காணப்படுகிறது. கடன் மறுசீரமைப்பிற்கு இணக்கம் காணப்பட்டால் மாத்திரமே அதன் உதவியைப் பெற்றுக் கொள்ள முடியும். கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளின் போது கடன் வழங்கிய நாடுகள் அவற்றின் நன்மைகளைக் கருத்திற் கொண்டே செயற்படும்.

எனவே அவை கடும் நிபந்தனைகளை எமக்கு விதிக்கக் கூடும். இவ்வாறான நிலைமைகளுக்கு மத்தியில் கடும் வரிச் சுமைகளை அரசாங்கம் மக்கள் மீது செலுத்திக் கொண்டிருக்கிறது. இவ்வாறு வரிகளை அதிகரிப்பதற்குப் பதிலாக ஊழல் மோசடிகளை தடுத்து நிறுத்த முடிந்தால் நெருக்கடிகளுக்கு தீர்வு காண முடியும் என அவர் தெரிவித்தார். (நி)

# கோட்டாவின் தோல்விக்கு நாமலே காரணம்- சன்ன ஜயசுமன



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தோல்விக்குக் கட்சியின் சக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவே காரணமென ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்களிடம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை உரையாற்றிய அவர் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஆலோசனைக்கு செவிசாய்த்து அதன்படி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ செயற்படுவார் என கட்சி எதிர்பார்த்தது.

முதல் சில மாதங்கள் கோட்டாபய ராஜபக்ஷ அவ்வாறு செயற்பட்ட போதிலும் அதன் பின்னர் முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உட்பட கட்சி உறுப்பினர்களின் ஆலோசனைகளை அவர் புறக்கணித்தாகவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மற்றும் சில குடும்ப உறுப்பினர்களின் ஆலோசனைகளை மாத்திரமே கோட்டாபய செவிமடுத்த தாகவும் அதனால்தான் அவர் ஜனாதிபதியாக தோல்வியடைந்ததாகவும் பேராசிரியர் சன்ன ஜயசுமன மேலும் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஆலோசனைக்கு செவிசாய்த்திருந்தால் கோட்டாபய தோல்வியடைந்திருக்க மாட்டார் என்றும் அவர் சுட்டிக் காட்டினார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 17





இதற்குள் வேறு பல காரியங்கள் நிகழ்ந்து விட்டன. கோட்டைக் கதவுகள் தடால், தடால் என்று சாத்தப்பட்டன. "பிடி! பிடி!" என்ற கூக்குரல்கள் எழுந்தன. வேல்களும் வாள்களும் உராய்ந்து 'கிளாங்' 'கிளாங்' என்று ஒலித்தன. திடீரென்று அபாயம் அறிவிக்கும் முரசு 'டடம்!' 'டடம்!' என்று முழங்கிற்று.

வந்தியத்தேவன் குதிரையைச் சுற்றிலும் வீரர்கள் வந்து சூழ்ந்து கொண்டார்கள். இருபது, முப்பது, ஐம்பது பேருக்கு மேலேயே இருக்கும். குதிரையின் மேலிருந்த வந்தியத்தேவன் பாய்ந்து தரையில் குதித்தான். கையிலிருந்த வாளைச் சுழற்றிக் கொண்டே, "கந்தமாறா! கந்தமாறா! உன் ஆட்கள் என்னைக் கொல்லுகிறார்கள்!" என்று கத்தினான்.

இதைக் கேட்டதும் அவனைச் சூழ்ந்திருந்த வீரர்கள் திடுக்கிட்டுச் சிறிது தயங்கி விலகி நின்றார்கள். அச்சமயம் மாளிகையின் மேல் மாட முகப்பிலிருந்து, "அங்கே என்ன கூச்சல்? நிறுத்துங்கள்!" என்ற ஓர் இடி முழக்கக் குரல் கேட்டது. அந்தக் குரல் கேட்ட இடத்தில் ஏழெட்டுப் பேர் நின்று கீழே நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

"எஜமான்! யாரோ ஒரு ஆள் காவலை மீறிப் புகுந்து விட்டான். சின்ன எஜமான் பெயரைச் சொல்லிக் கூவுகிறான்!" என்று கீழேயிருந்த ஒருவன் சொன்னான்.

"கந்தமாறா! நீ போய்க் கலவரம் என்னவென்று பார்!" இவ்விதம் மேல் மாடத்திலிருந்து அதே இடி முழக்கக் குரல் சொல்லிற்று. அந்தக் குரலுக்கு உடையவர்தான் செங்கண்ணர் சம்புவரையர் போலும் என்று வந்தியத்தேவன் எண்ணினான்.

அவனும் அவனைச் சுற்றி நின்ற வீரர்களும் சிறிது நேரம் அப்படியே நின்று கொண்டிருந்தார்கள்.

"இங்கே என்ன ஆர்ப்பாட்டம்?" என்ற ஓர் இளங்குரல் கேட்டது. அந்தக் குரல் கேட்ட இடத்தில் நின்றவர்கள் விலகிக் கொண்டு வழி ஏற்படுத்தினார்கள். வாலிபன் ஒருவன் அந்த வழியாக விரைந்து வந்தான். கையில் பிடித்த கத்தியை இலேசாகச் சுழற்றிக் கொண்டு சூரசம்ஹாரம் செய்த சுப்பிரமணியரைப் போல நின்ற வந்தியத்தேவனை ஒரு கணம் வியப்புடன் நோக்கினான்.

"வல்லவா, என் அருமை நண்பா! உண்மையாகவே நீதானா?" என்று உணர்ச்சி ததும்பக் கூவிக் கொண்டு ஓடிச் சென்று வல்லவரையனை அந்த இளைஞன் கட்டித் தழுவிக் கொண்டான்.

"கந்தமாறா! நீ படித்துப் படித்துப் பல தடவை சொன்னாயே என்று உன் வீட்டுக்கு வந்தேன். வந்த இடத்தில் எனக்கு இத்தகைய வீர வரவேற்புக் கிடைத்தது." என்று வந்தியத்தேவன் தன்னைச் சுற்றி நின்றவர்களைச் சுட்டிக்காட்டினான்.

அவர்களைப் பார்த்து "சீ முட்டாள்களே! போங்கடா! உங்கள் அறிவு உலக்கைக் கொழுந்துதான்!" என்றான் கந்தமாறான்.

கந்தமாறன் வந்தியத்தேவனின் கையைப் பிடித்துப் பரபரவென்று இழுத்துக் கொண்டு போனான். அவனுடைய கால்கள் தரையில் நில்லாமல் குதித்துக் கொண்டேயிருந்தன. அவனுடைய உள்ளமும் துள்ளிக் குதித்தது.

யௌவனப் பிராயத்தில் உண்மையாக உள்ளம் ஒன்றுபட்ட ஒரு நண்பன் கிடைத்தால் அதைக்காட்டிலும் ஒருவனைப் பரவசப்படுத்தக் கூடியது வேறு என்ன உண்டு?

ஆம், காதல் என்பது ஒன்று இருக்கத்தான் செய்கிறது. ஆனால் காதலில் இன்பமும் குதூகலமும் எத்தனை உண்டோ அதை விட அதிகமான துன்பமும் வேதனையும் உண்டு. யௌவனத்துச் சிநேக குதூகலத்திலோ துன்பத்தின் நிழல் கூட விழுவதில்லை. ஒரே ஆனந்தமயமான இதயப் பரவசந்தான்.

போகிற போக்கில், வல்லவரையன், "கந்தமாறா! இன்றைக்கு என்ன இங்கே ஏகதடபுடலாயிருக்கிறது? இவ்வளவு கட்டுக்காவல் எல்லாம் எதற்காக?" என்றான்.

(தொடரும்)

# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

# நீல நிறப் பூ

(நேற்றைய தொடர்ச்சி)

ஆனால் சிவராஜன் கூறியது போல இரண்டு நாட்கள் கழித்து நல்ல மழை பெய்தது. அது முதல் சிவராஜன் கூறுவதை அவ்வூரார் நம்பினர். அவனது மதிப்பு உயர்ந்து வருமானமும் பெருகலாயிற்று. வெளியூர்களிலிருந்து பலர் வந்து மழை பெய்வது பற்றிக் கேட்டுச் சென்றார்கள்.

இப்படி இருக்கையில் ஓர் ஆண்டில் அப்பகுதியில் கடும் வரட்சி ஏற்பட்டது. அதற்கடுத்த ஆண்டிலும் மழை பெய்யவில்லை. அப்போது சிவராஜன் தன் ஊராரிடம் "இன்னும் ஒரு மாதத்திற்கு இங்கு மழை இல்லை" என்று கூறினான்.

அப்போது அயலூரிலிருந்து சிவபுரிக்கு வந்திருந்த ஒருவன் கிராம அதிகாரியின் வீட்டிற்குச் சென்றான். அங்கு அதே வேளையில் சிவராஜனும் இன்னும் சில ஊர்ப் பிரமுகர்களும் இருந்தார்கள்.


அயலூரான் தன்னைப் பார்க்கத்தான் வந்திருக்கிறான் என்று நினைத்து சிவராஜன் "நாடே வரட்சியில் தவிக்கும் போது என்னிடம் கேட்டதாலேயே உங்கள் ஊரில் மட்டும் மழை பெய்து விடுமா?" என்று கேலியாகக் கூறினான்.

அயலூரானும் "ஐயா! முன்பெல்லாம் நீங்கள் மழை எப்போது பெய்யுமென்று சரியாகக் கூறி வந்தீர்கள். ஆனால் இப்போது நீங்கள் சொன்னது தவறு. எங்கள் ஊருக்கு ஒரு மகாபுருஷர் வந்திருக்கிறார்.

அவர் இன்னும் இரண்டு நாட்களில் மழை பெய்யும் என்று கூறினார். அதன்படி மழையும் பெய்தது. அவரை இந்த ஊருக்கும் அழைத்து வந்தால் நல்ல பயன் ஏற்படலாம்" என்றான்.

இதைக் கேட்ட சிவராஜன் தலைகுனிந்து கொண்டான். ஊரார் உடனே அந்த மகாபுருஷனை அழைத்து வரச் சென்றனர். அந்த மாகபுருஷரும் அவ்வூருக்கு வந்து மறுநாளே அங்கு மழை பெய்யும் எனக் கூறினார். அவ்வாறே மழையும் பெய்தது.

சிவராஜன் வந்திருப்பவன் ர்வீந்திரன் என அறிந்து அவனைக் கண்டு "இவ்வளவு நாட்களாக நான் மழை பற்றிக் கூறியது பலித்து வந்தது. ஆனால் இப்போது என் சக்தி குறைவா நம் குரு ஏதாவது செய்து விட்



டாரோ?" என்று கேட்டான். ரவிந்திரனும் "நம் குரு எதுவும் செய்யவில்லை. நம் எல்லோருக்குமே நீல மலர் பூக்கும் செடிகள் வரும் விதைகளைத் தான் தந்தார். அவர் எல்லோரையும் பரீட்சிக்கும் ஒரு விதையின் செடியில்தான் மலர் பூக்கும் என்று கூறினார்.

நான் ஒருவன் தான் அவரிடம் நீல மலரைக் கொண்டு போய்க் கொடுத்தேன். வேறு எந்த சீடனும் கொடுக்கவில்லை. என் குரு பக்தியைக் கண்டு மகிழ்ந்து அவர் எனக்கு வரட்சியின் போது மழையை வரவழைக்கும் சக்தியை அளித்தார். அந்த மலரையும் எனக்கே கொடுத்து அதை மென்று தின்னச் சொன்னார். என் சக்தியை துர்விநியோகம் செய்யக் கூடாது. என்றும் கூறினார். அதனால் எனக்கு இப்படிப்பட்ட சக்தி இருக்கிறதென்று யாரிடமும் கூறாமல் மக்களுக்கு உதவி வருகிறேன்" என்றான்.

அப்போதுதான் சிவராஜனுக்கு தனக்கும் ரவீந்திரனுக்கும் என்ன வித்தியாசம் என்பது தெரிந்தது. குரு ரவீந்திரனுக்கு ஏன் தனியாகக் கற்றுக் கொடுத்தார் என்ற காரணமும் புரிந்தது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

> தவறு செய்ததைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்; இரண்டாவது தடவையும் அதே தவறைச் செய்யா திருத்தல் பற்றியே கவலைப்பட வேண்டும்.
> – அலன் தார்ன்ஹில்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வடபகுதிக்கு போதைவஸ்தை அனுப்புவது யார்?

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டு பல தரப்பையும் சந்தித்திருந்தார்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து பிரஸ்தாபித்த நீதி அமைச்சர், அது தொடர்பில் உறுதியான முடிவு எதனையும் தெரிவிக்கவில்லை.

இது ஒருபுறமிருக்க, போதைவஸ்து விவகாரம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் விஜயதாஸ; வட மாகாணத்திலேயே போதைவஸ்து அதிகமாகவுள்ளதென்றும் எனினும் தனித்து முப்படையினரால் மட்டும் அதனைக் கட்டுப்படுத்த முடியாதென்றும் கூறியுள்ளார்.

நீதி அமைச்சர் விஜயதாஸவின் மேற்போந்த கருத்துக்கள் இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் வடபகுதி இல்லை என்பது போல அமைந்திருக்கிறது.

அதாவது, வடபகுதியிலேயே போதைவஸ்து அதிகமாகவுள்ளதெனில், குறித்த போதைவஸ்தை வடபகுதிக்குக் கொண்டு வருவது யார் என்ற கேள்வி எழும்.

அதேநேரம், போதைவஸ்து வியாபாரம் வடக்கில் அமோகமாக நடைபெறுகிறதெனில் வட பகுதியில் இருக்கக்கூடிய பொலிஸார் என்ன செய்து கொண்டிருக்கின்றனர் என்று கேள்வி எழுப்புவதில் நியாயம் இருக்கவே செய்யும்.

தமிழர் தாயகமான வடக்கிலும் கிழக்கிலும் முப்படையினரைக் குவித்து வைத்திருக்கக்கூடிய நிலையில், வடபகுதிக் கடலோரங்களில் கடற்படையினர் அடிக்கடி ரோந்துப் பணியில் ஈடுபட்டிருக்கின்றவேளையில், போதைப் பொருள் எங்ஙனம் வடபகுதிக்கு வருகிறது என்று ஆராய்கின்ற கடமை அரசாங்கத்துக்கு உண்டு.

ஆக, நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவின் கருத்துக்கள் பொறுப்பானதாக இல்லை என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

உண்மை. வடபகுதியில் உள்ள போதைப் பொருள் வர்த்தகம் என்பது திட்டமிடப்பட்ட ஒரு கொடுஞ் செயல்.

வடபகுதியில் இருக்கக்கூடிய தமிழ் இளைஞர்களைப் பாழாக்கி தமிழினத்தை அழிக்கின்ற நடவடிக்கைதான் அது என்பதை எந்த இடத்திலும் தமிழ் மக்கள் கூறத்தயாராக உள்ளனர்.

தவிர, வடபகுதியில் இடம்பெறும் போதைவஸ்து வர்த்தகத்துக்கு படைத்தரப்பின் ஒத்துழைப்பு உண்டென்பதும் மறுக்க முடியாத உண்மை.

ஆக, நீதியமைச்சர் விஜயதாஸ வடபகுதி மக்கள் தொடர்பில் கருசனை கொண்டவராக இருந்தால், முதலில் போதைவஸ்து வியாபாரத்துக்கு துணையாக இருக்கக்கூடிய பொலிஸாரையும் படையினரையும் இனங்கண்டு அவர்களுக்குத் தக்க தண்டனை வழங்க வேண்டும்.

இதைவிடுத்து வடபகுதியிலேயே போதைப் பாவனை அதிகம் என்று மொட்டையாகக் கூறுவது எந்தவகையிலும் நியாயமாகாது.

மாறாக அது தமிழ் மக்களைத் தரம் தாழ்த்துகின்ற கருத்தாகவே கருதப்படும்.

# பெண்கள், சிறுவர்களுக்காக தனியான நீதிமன்றம் அவசியம்

## இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க

(கொழும்பு)

பெண்கள் மற்றும் சிறுவர்களுக்காக தனியான நீதிமன்றத்தை உருவாக்குவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட வேண்டியது அவசியம் என்று, மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் குறைபாடுகள் உள்ளிட்ட விடயங்களை கேட்டறிந்துகொள்வதற்காக, மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க குறித்த அதிகார சபைக்கு விஜயம் மேற்கொண்டார். இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர்,

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையில் நிலவும் குறைபாடுகள், மக்களின் முறைப்பாடுகள் தொடர்பில் கண்டறிவதற்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு வருகை தந்தேன். நாட்டின் சிறுவர்கள் தொடர்பில் எமக்கு பாரிய பொறுப்பு உள்ளது. சிறுவர்கள் என்பவர்கள் எமது நாட்டின் எதிர்காலம்.

எனவே மகளிர் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரிகள் என்பன இணைந்து சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பில் நடவடிக்கை எடுப்பது தொடர்பிலேயே அவதானம் செலுத்தியுள்ளோம். தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்குள் பாரியளவிலான குறைபாடுகள் காணப்படுகின்றன.

முதலாவது பொலிஸார் இந்த அமைச்சுக்கு நேரடியாக தொடர்புபடுவதில்லை.

அடுத்ததாக நாம் தாக்கல் செய்யும் வழக்குகளுக்கு நீதிமன்றங்களால் வழங்கப்படும் தீர்ப்புகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து மேன் முறையீடு செய்கின்றனர். இதனால் 330 வழக்குகள் குவிந்து கிடக்கின்றன.

இவ்வருடத்தில் இந்த எண்ணிக்கை அதிகரித்து இருக்கலாம். இவ்விடயங்கள் தொடர்பாக மக்கள் என்னை தேடி வருகின்றனர். வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு ஐந்து, பத்து வருடங்களாகின்றன. இதனை தொடர்ந்து முன் கொண்டு செல்ல முடியாது என்று கூறுகின்றனர்.

எனவே, பெண்கள், சிறுவர்களுக்கென தனியான நீதிமன்றத்தை உருவாக்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சிறுவர்கள், பெண்கள் தொடர்பிலான வழக்குகளை விரைவாக முடிவுக்கு கொண்டு வருவதற்காக இவ்வாறான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

தற்போதைய சூழ்நிலையில் கொழும்பில் மட்டும் ஒரு நீதிமன்றத்தை உருவாக்கினால் போதும்.

எனினும் எதிர்காலத்தில் ஏனைய மாவட்டங்களிலும் இவ்வாறான நீதிமன்றங்கள் உருவாக்கப்பட வேண்டியது அவசியமாகும். ஏனெனில், யாழ்ப்பாணத்தில் உள்ளவருக்கு கொழும்புக்கு வந்து செல்ல முடியாது என்றார். (ம-7)

## இராஜாங்க அமைச்சரின் வாகனம் மோதி காயமடைந்தவர் மரணம்

கடந்த ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதி இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் அதிசொகுசு வாகனம் மோதியதில் பலத்த காயமடைந்து, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இரண்டு பிள்ளைகளின் தந்தை மரணமடைந்தார்.

படுகாயமடைந்த அவர் குருநாகல் வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே 15 நாட்களுக்குப் பின்னர் நேற்று முன்தினம் மரணமடைந்தார்.

புத்தளம் முள்ளிபுரம் மீன்பிடி கிராமத்தில் வசிக்கும் 48 வயதுடைய மொஹமட் சிஹாம் என்பவரே மரணமடைந்துள்ளார்.

மொஹமட் சிஹாம் செலுத்திவந்த சிறிய ரக வாகனத்தை இராஜாங்க அமைச்சரின் வாகனம் புத்தளம் நகரத்தை நோக்கி பயணித்துக்கொண்டிருந்தபோது முந்திச் செல்ல முற்பட்ட வேளையிலேயே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்தவர், புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர், குருநாகல் வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைகளுக்காக மாற்றப்பட்டார்.

அங்கு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு, 15 நாட்களாக சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே மரணமடைந்தார். (ம-7)

## கசிப்பு காய்ச்சிய இருவர் நீர்வேலியில் கைது

யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினரால், கசிப்பு காய்ச்சிய இருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டபொலிஸ் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், நீர்வேலியில் உள்ள வீட்டில் வைத்து கசிப்பு காய்ச்சிய போது அவர்கள் இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர்.

40 வயது பெண்ணும் 35 வயது ஆணும் 20 லீட்டர் கசிப்பு, 50 லீட்டர் கோடா மற்றும் கசிப்பு காய்ச்சிய உபகரணங்கள் போன்றவற்றுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த கைது நடவடிக்கை மூலம் நீண்ட காலமாக இடம்பெற்ற கசிப்பு உற்பத்தி வியாபாரம் முறியடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் சான்றுப் பொருட்களுடன் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளனர். (ம-7,104)

## அல்லாரை வடக்கு பகுதியில் ஆலயம் ஒன்றில் திருட்டு

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அல்லாரை வடக்குப் பகுதியில் உள்ள ஆலயமொன்றில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு திருடர்கள் திருட்டில் ஈடுபட்டதாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது ஆலயத்தில் இருந்த மூன்று பவுண் நகை, உண்டியல் உள்ளிட்ட பெறுமதியான பொருட்களை கொள்ளையிட்டுச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த திருட்டுச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30)

> **வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2022**
>
> "நீண்ட காலத்தின் முன்பு ஒருவர் மரம் ஒன்றினை நாட்டியதன் பயனாகவே இன்று இன்னொருவர் அதன் நிழலில் அமர்ந்துள்ளார்."
>
> வாரன் பபெற் (அமெரிக்க தொழிலதிபர்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** பந்திங் சென்டர்-கலைவாணி வீதி, கல்வியியல் கல்லூரி-கோப்பாய், கோண்டாவில் நீர் வழங்கல் சபை, கோப்பாய் இராணுவ முகாம், இராஜேஸ்வரி மண்டபம், பல்கலைக்கழக வீதி, கலைவாணி, திருநெல்வேலி, கோண்டாவில் கிழக்கு, கிருஷ்ணன் கோவிலடி, பொற்பதி, புகையிரத நிலைய வீதிசந்தி, இராஜ வீதி-கோப்பாய், சம்பத் வங்கி, வாமாஸ் வீதி வல்லான், ஆலடி சந்தி, இறுப்பிட்டி, கேரைதீவு, குறிகட்டுவான், மடத்து வெளி, நடுவுக்குறிச்சி, புங்குடுதீவு, அரசடி சந்தி அராலிவீதி- சங்கானை, துணைவி ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** மறக்கறம்பளை -கணேசபுரம், சமயபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 113

ஆனால் பிரான்ஸ் மற்றும் இஸ்ரேலின் ஆயுதங்களின் எண்ணிக்கை ஏறக்குறைய அதே போல இருப்பதாக கூறப்படுகிறது.

அதே சமயம் இந்தியா, பாகிஸ்தான், சீனா, வடகொரியா ஆகிய நாடுகள் அணு ஆயுதங்களின் எண்ணிக்கையை அதிகரித்து வருகின்றன என்று அமெரிக்க விஞ்ஞானிகள் கூட்டமைப்பு கூறியுள்ளது.

**விளாடிமிர் புடின்: உக்ரைன் மீது படையெடுக்கும் இந்த ரஷ்ய ஜனாதிபதி யார்?**

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின். உக்ரைன் மீதான படையெடுப்பால் பலரையும் இவர் திகைக்க வைத்திருக்கலாம். 2014 இல் கிரிமியாவை ரஷ்யாவுடன் இணைத்தற்குப் பிறகு இந்தப்பிராந்தியத்தில் அவர் மேற்கொண்டுள்ள மிகப் பெரிய நடவடிக்கையாகும் இது. ஆனால் ரஷ்ய செல்வாக்கை மீண்டும் ஏற்படுத்துவதற்கான தனது உறுதிப்பாட்டை அவர் ஒரு போதும் ரகசியமாக வைத்திருக்கவில்லை.

புடின் 2000 ஆவது ஆண்டு முதல் ஆட்சியில் இருந்து வருகிறார். ரஷ்யாவின் ஜனாதிபதியாக உள்ள அவர், பிரதமர் பதவியையும் வகித்திருக்கிறார். 1953 இல் காலமான சோவியத் சர்வாதிகாரி ஜோசப் ஸ்டாலினுக்குப் பிறகு மிக நீண்ட காலம் பதவியில் நீடிக்கும் ரஷ்யத் ஜனாதிபதி இவர் தான்.



விளாடிமிர் புடின்

2020 ஆம் ஆண்டில் நடந்த அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் குறித்த சர்ச்சைக்குரிய தேசிய வாக்கெடுப்பானது, 2024 இல் முடிவடையும் அவரது தற்போதைய நான்காவது பதவிக் காலத்திற்கு அப்பாலும் அவர் ஜனாதிபதியாக நீடிக்க வாய்ப்பளித்துள்ளது. எனவே அவர் 2036 வரை ஆட்சியில் இருக்க முடியும்.

ஆனால் அவர் எப்படி இந்த இடத்துக்கு வந்தார்? தற்போது உலகம் முழுவதும் தலைப்புச் செய்திகளில் அடிபடும் இவரது அரசியல் மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையை சிறிதே திரும்பிப் பார்ப்போம்.

**முன்னாள் உளவாளி**

புடினின் உலகப் பார்வையை வடிவமைத்த சோவியத் காலத்தில் இருந்த பண்புகளை விமர்சகர்கள் அவரிடம் பார்க்கிறார்கள். சோவியத் யூனியனின் வீழ்ச்சியின் குழப்பத்திற்கு இடையே அதிவேகமாக ஜனாதிபதியாக அவர் உயர்வதற்கு முன்னால் சோவியத் உளவு அமைப்பான KGB இல் பணியாற்றினார்.

அவரது நெருங்கிய உதவியாளர்கள் மற்றும் நண்பர்கள் பலருக்கு இந்த உளவு அமைப்புடன் தொடர்புகள் உள்ளன. விளாடிமிர் புடினின் அரசியல் வாழ்க்கை 1990களின் முற்பகுதியில் தொடங்கியது. அவர் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் மேயர் அனடோலி சோப்சாக்கின் உயர் உதவியாளராக பணியாற்றினார். சோப்சாக் முன்பு அவருக்கு பல்கலைக்கழகத்தில் சட்டம் கற்பித்தார்.

1997 ஆம் ஆண்டில், அவர் ஃபெடரல் செக்யூரிட்டி சர்வீஸ் FSB இன் (KGB இன் முக்கிய வாரிசு) தலைவராக ரஷ்ய ஜனாதிபதி மாளிகை வட்டத்திற்குள் நுழைந்தார். விரைவில் அவர் பிரதமராக நியமிக்கப்பட்டார்.

1999 ஆம் ஆண்டு புத்தாண்டு தினத்திற்கு முன்தினம், ரஷ்ய ஜனாதிபதி போரிஸ் யெல்ட்சின் இராஜினாமா செய்து புடினை தற்காலிக ஜனாதிபதியாக நியமித்தார். அப்போது முதல் ஆட்சியில் இருந்து வரும் அவர், தொடர்ந்து மூன்றாவது முறையாக ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட ரஷ்ய அரசியலமைப்பு தடை செய்த காரணத்தால், 2008 - 2012 கால கட்டத்தில் பிரதமராக பணியாற்ற வேண்டியிருந்தது.

வாக்கு மோசடி குற்றச்சாட்டுகளுக்கு மத்தியில் புடின், 2012 தேர்தலில் 66% வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு திரும்பினார். அவர் சோவியத் பாணி இராணுவ அணி வகுப்புகளை மீட்டெடுத்தார். ஒரு காலத்தில் தடைசெய்யப்பட்ட ஸ்டாலின் உருவப்படங்கள் மீண்டும் தோன்றின.

1957 இல் உலகின் முதல் செயற்கைக்கோளாக மாறிய சோவியத் ஸ்புட்னிக் பெயரால், ரஷ்யாவின் கொவிட் தடுப்பூசி ஸ்புட்னிக் V என்று அழைக்கப்படுகிறது. சோவியத் யூனியனின் சரிவை "20 ஆம் நூற்றாண்டின் மிகப்பெரிய புவிசார் அரசியல் பேரழிவு" என்று புடின் விபரித்தார்.

(தொடரும்)

# சர்வதேச நாணய நிதியத்துடன் ஜனவரிக்குள் ஒப்பந்தம்

## ஜனாதிபதி நம்பிக்கை

**(கொழும்பு)**

**ஜனவரிக்குள் சர்வதேச நாணய நிதியத்துடன் ஓர் ஒப்பந்தத்தை எட்ட முடியும் என அரசாங்கம் நம்புவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

பனிப்பாறையில் விழுந்த டைட்டானிக் கப்பலை தாம் கையகப்படுத்தியதாகவும் தற்போது கப்பலை பனிப்பாறையில் இருந்து நகர்த்த முயற்சிப்பதாகவும் பனிப்பாறையில் இருந்து டைட்டானிக் கப்பல் நகர்ந்தால் நாடு முன்னேற முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



இலங்கை தன்னை திவாலானதாக அறிவித்துவிட்டதாகவும் எனினும் நிதியுதவிக்காக சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கையை மேற்கொள்ள முடியும் என அரசாங்கம் நம்புவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அதற்கமைய, நவம்பர் நடுப்பகுதியில் ஓர் ஒப்பந்தத்திற்கு வரலாம் என்றும் டிசெம்பர் நடுப்பகுதியில் சர்வதேச நாணய நிதியம் வரை சென்றால், தாங்களுக்கு ஒரு பெரிய நன்மை கிடைக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதே நேரம், எரிபொருளின் விலை தற்போது குறைந்துள்ளபோதிலும் உக்ரைன் போர் மற்றும் குளிர் காலம் காரணமாக டிசெம்பர் அல்லது ஜனவரி மாதங்களில் எரிபொருளின் விலை மீண்டும் அதிகரிக்கலாம்.

எனவே , நாடு எதிர்கொள்ள வேண்டிய அடுத்த பிரச்சினை இதுதான் என்றும் அவர் தெரிவித்தார். (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 350 | 300 | 400 |
| உருளைக்கிழங்கு | 230 | 210 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 200 | 300 | 250 | 200 |
| தக்காளி | 400 | 340 | 320 | 360 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 200 | 120 | 200 |
| கோவா | 400 | 280 | 320 | 350 |
| கரட் | 350 | 390 | 450 | 450 |
| பூசணி | 200 | 200 | 200 | 200 |
| புடோல் | 250 | 280 | 180 | 160 |
| வாழைக்காய் | 200 | 150 | 120 | 160 |
| சின்ன வெங்காயம் | 450 | 400 | 550 | 500 |
| பெரிய வெங்காயம் | 260 | 250 | 250 | 280 |
| பாகற்காய் | 600 | 700 | 600 | 800 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 180 | 150 | 160 | 200 |
| பயற்றங்காய் | 400 | 450 | 600 | 400 |
| லீக்ஸ் | 280 | 300 | 280 | 350 |
| பீற்றூட் | 250 | 300 | 250 | 300 |
| கறிமிளகாய் | 500 | 650 | 750 | 700 |
| முருங்கைக்காய் | 600 | 400 | 400 | 600 |
| போஞ்சி | 380 | 450 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 280 | 250 | — | 350 |
| கீரை - 1 பிடி | 120 | 150 | 160 | 140 |
| தேசிக்காய் | 600 | 500 | 650 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 85 | 65 | 50-80 |
| இராசவள்ளி | 280 | 300 | 250 | 250 |
| வெங்காயப்பூ | 600 | 400 | 350 | 500 |
| முள்ளங்கி | 120 | 180 | 160 | 250 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 60 |
| வல்லாரை | 30 | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | 100 | 160 | 120 | 150 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முதியவர் ஒருவர்...

பரந்தன் பகுதியில் உள்ள தனியார் விடுதியொன்றில் இருந்து நேற்று முதியவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி ஏ9 வீதியின் பரந்தன் பகுதியிலுள்ள தனியார் விடுதியொன்றில் தனிமையில் தங்கியிருந்த முதியவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

71 வயதுடைய சின்னையா நாகலிங்கம் என்ற முதியவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். மேற்படி முதியவரின் சடலம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டதுடன் நீதிமன்ற கட்டளைக்கு அமைவாக உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (ம-7, 315)

## வீடுடைத்து...

கள் கைவரிசை காட்டியுள்ளனர்.

கணவனும் மனைவியும் வேலைக்கு சென்றிருந்த வேளையில் வீட்டினை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் வீட்டில் இருந்த சங்கிலி, தோடு, காப்பு உள்ளடங்கலாக ஐந்தரைப் பவுண் நகையினை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

அரச உத்தியோகத்தர்களான வீட்டு உரிமையாளர்கள் குறித்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர். (ம-7,30)

## விபரீத முடிவெடு...

இரவு இடம்பெற்றுள்ளது.

உயர்தரப் பிரிவில் கல்வி கற்கும் மாணவனே இவ்வாறு விபரீத முடிவெடுத்து உயிரிழந்துள்ளதாக இலுப்பைக்கடவைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இலுப்பைக்கடவைப் பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய அருள்நேசராஜா அனோஜன் என்ற மாணவனே உயிரிழந்தவராவார்.

இறப்பு தொடர்பான விரிவான விசாரணைகளை இலுப்பைக்கடவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,60)

## கோண்டாவிலில்...

இந்நிலையில் நேற்று மாலை குறித்த முதியவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதில் கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த எஸ்.விக்கினேஸ்வரன் (வயது 68) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ம-7,104)

## கடற்படைச்...

வார்.

இம்மரணம் தொடர்பில் மரணவிசாரணையை வலிகாமம் கிழக்கு திடீர் மரணவிசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

பிரேத பரிசோதனைக்காக சடலம் தெல்லிப்பழை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-7,60,104)

## வீடியோ அழைப்பு...

இளைஞன் 5 வருடமாக யுவதி ஒருவரை காதலித்து வந்துள்ளார்.

காதலியுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக தொலைபேசியில் வீடியோ அழைப்பை எடுத்தவாறு நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு தூக்கில் தொங்கியுள்ளார்.

இம்மரணம் தொடர்பில் மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-7,60)

## காதல் விவகாரம்...

வில் பகுதியைச் சேர்ந்த சதன் (வயது-26) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார். (ம-7,60)

## கோப்பாய்...

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் குறித்த வீதியை சிரமதானம் செய்ய முற்பட்டுள்ளனர்.

இதற்கு இடையூறு ஏற்படுத்திய இராணுவத்தினர் அந்த வீதியை சிரமதானம் செய்து பௌத்த கொடியை நாட்டுவதற்கு முற்பட்டனர்

இதனால் இரு தரப்பினருக்கும் இடையில் குழப்பமான சூழல் ஏற்பட்டதைத் தொடர்ந்து இராணுவத்தினரால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் உள்ளிட்ட பிரதிநிதிகள் புகைப்படம் எடுக்கப்பட்டு அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

பௌத்த கொடியை நட்டால் நாம் கழற்றுவோம். சுடுவதென்றால் சுடுங்கள், புலிகளை அழிப்பதாகக் கூறி பாவத்தை தேடிய தரப்புக்கள் இன்று நாட்டை அழித்து, ஆட்சியிலிருந்து விரட்டப்பட்டுள்ளனர், மேலும் மேலும் பாவங்களை தேடாதீர்கள் என நாம் இராணுவத்தினருக்கு தெரிவித்தோம் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

எனினும் சில மணி நேரத்தின் பின்னர் இராணுவத்தினர் அங்கிருந்து சென்றுள்ளனர். அதனைத் தொடர்ந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் சிரமதானப் பணியை முன்னெடுத்தனர். (ம-7)

# வட மாகாணத்தில் மழை தொடரும்



நாட்டை அண்மித்த வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள தாழமுக்க நிலை வலுவடைவதால், வடக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளில் மழையுடன் கூடிய வானிலை நீடிக்கும் சாத்தியம் உள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல், ஊவா மற்றும் வடக்கு மாகாணத்தின் சில பகுதிகளில் 150 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை வீழ்ச்சி பதிவாகலாம் என திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் போது பலத்த காற்று வீசக்கூடும் என்பதுடன், இதனால் ஏற்படும் பாதிப்புகளை குறைத்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ம-7)

## கொழும்பில்...

மருதானையில் இருந்து இன்று பிற்பகல் கோட்டை ரயில் நிலையம் வரை பேரணி முன்னெடுக்கப் படவுள்ளதுடன், அதன் பின்னர் பொதுக் கூட்டம் ஒன்றும் நடைபெறவுள்ளது.

இன்று நடைபெறவுள்ள போராட்டத்திற்கு பூரண ஆதரவு வழங்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தீர்மானித்துள்ளது.

முன்னிலை சோசலிசக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, 43 ஆம் செயலணி, சுதந்திர மக்கள் சபை உள்ளிட்ட சுமார் 20 அரசியல் கட்சிகளும் சுமார் 150 தொழிற் சங்கங்களும் அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கு எதிரான போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளன. (ம-7)

## அமைதி...

அடக்குவதற்கு பாதுகாப்புத் தரப்பினர் தயாராக இருந்தால் உடனடியாக அந்தத் தயார்படுத்தல்களை மீளப்பெற வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அடக்குமுறைக்கு எதிரான தொழிற்சங்கங்களின் கூட்டுப் பிரகடனத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று கையெழுத்திட்டார். அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

'கொழும்பில் முன்னெடுக்கப்படவுள்ள பேரணியில் ஐக்கிய மக்கள் சக்தி பங்கேற்காது என்று சிலர் கூறுகின்றனர். இது முழுமையான பொய்யாகும்' என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)


தன நிதானய
திகதி - 2022.11.01
சீட்டிழுப்பு இலக்கம் - 956
X 04 21 57 58
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

மஹஜன சம்பத
திகதி 2022/11/01
சீட்டிழுப்பு இலக்கம் 4926
ஆங்கில எழுத்து | வெல்லப்பட்ட இலக்கங்கள்
D 8 4 4 9 8 1
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.11.01
சீட்டிழுப்பு இலக்கம் 235
வெற்றி இலக்கினம் | வெற்றி இலக்கங்கள்
தனுசு - 10 31 43 57 தனுசு
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 01/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1274
வெற்றி எழுத்து | சுப்பர் இலக்க | வெற்றி இலக்கங்கள்
R 25 05 57 58 71

கொவிசெத
திகதி 2022.11.01
சீட்டிழுப்பு இலக்கம் 3168
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
A 28 46 55 76
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 01/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1381
வெற்றி இலக்கங்கள்
ரிஷபம் 8 6 6 1 9 7
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1901
நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2022.11.01
தினம் செவ்வாய்க்கிழமை
A 12 17 48 71
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,018,820/-
அபிவிருத்தி லொத்தர் சபை

சனிதா Shanida
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.11.01
சீட்டிழுப்பு இல : 4062
வர்ணம் : இள நீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,476,460/-
வெற்றி இலக்கங்கள் 06 25 37 54
ஆங்கில எழுத்து W
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 243
சீட்டிழுப்பு திகதி 2022.11.01
செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 17 40 47
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,371,040/-
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,814,221.40
திகதி 2022-11-01
வெற்றி வாரம் 3613
வெற்றி இலக்கங்கள் 10 23 41 46
மீனம்
வர்ணம் சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,850,960/-
அபிவிருத்தி லொத்தர் சபை

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
B 13 07 14 27 61
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1077
வர்ணம் இளஞ்சிவப்பு
திகதி 2022.11.01 செவ்வாய்க்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 273,925,373.80
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல : 1727
வர்ணம் : இள நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2022.11.01
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,809,320/-
வெற்றி இலக்கங்கள் 06 10 28 53
ஆங்கில எழுத்து L
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முதலாவது தமிழ் இராணுவ உத்தியோகத்தர் காலமானார்

இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட கெமுனு இராணுவ அணியின் முதலாவது படைப் பிரிவில் இணைந்து கொண்ட தமிழ் இராணுவ உத்தியோகத்தரான விஸ்வலிங்கம் என்பவர் தனது 90 ஆவது வயதில் நேற்று செவ்வாய்க்கிழமை காலமானார்.



1932 ஆம் ஆண்டு கைதடியில் பிறந்த விஸ்வலிங்கம் 1956 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் தேதி இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது கெமுனுப் படைப்பிரிவில் இணைந்து கொண்டார்.

பயிற்சி சிப்பாயாக இணைந்து கொண்ட விஸ்வலிங்கம், இராணுவப் பயிற்சியை தியத்தலாவ இராணுவ முகாமில் தனது ஆரம்ப பயிற்சியை முடித்தார்.

இராணுவ சேவையில் இருந்து ஓய்வு பெற்ற நிலையில் கைதடியில் உள்ள அவரது இல்லத்தில் வசித்து வந்த நிலையில் இயற்கையை எய்தினார்.

அவரது மரணச் சடங்கை கெமுனுப் படைப் பிரிவு குண்டு மழை பொழிய இராணுவ அணிவகுப்புமரியாதையுடன்இறுதிஅஞ்சலிசெலுத்தப்பட்டது. (ம-7,104)

# ஹெரோயின் வைத்திருந்த நபருக்கு ஆயுள் தண்டனை

ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்தார் என்று குற்றம் சுமத்தப் பட்டிருந்த நபரொருவரை குற்றவாளியாக இனங்கண்ட கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க, அவருக்கு ஆயுள் தண்டனையும் 25,000 ரூபாய் அபராதமும் விதித்து, நேற்று தீர்ப்பளித்துள்ளார்.

2016 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29 ஆம் திகதியன்று, மஹாபாகே பகுதியில் வைத்து 4 கிராம் ஹெரோயினுடன் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

தீர்ப்பை வாசிக்கும் போது, குற்றம் சாட்டப்பட்டவர் மீதான குற்றச்சாட்டுகளை அரச தரப்பு சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபித்துள்ளதாக அறிவித்த நீதிபதி, அவருக்கு ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார். (ம-7)

# சில உணவு வகைகளின் விலைகள் குறைவடைந்தன

உணவு வகைகள் சில வற்றின் விலையை 10 ரூபாயினால் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த விலை குறைப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ரோல்ஸ், பரோட்டா, முட்டை ரொட்டி, காய்கறி ரொட்டி ஆகியவற்றின் விலை 10 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஒரு சாதாரண தேநீர் 30 ரூபாய்க்கும் ஒரு பால் தேநீர் 100 ரூபாய்க்கும் விற்பனை செய்ய எதிர்பார்க்கப்படுவதாக சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார். (ம-7)


**IELTS** DMI COMPUTER EDUCATION 0777 17 35 17

#Student VISA மூலம் வெளிநாடு செல்வோருக்கானது
# Unique Test Tips
# 40 hrs with free 4 mock exam
# Latest course Material (Book 16)
Academic or General

**IELTS Life Skills - A1**
திருமணம் செய்து UK செல்வோருக்கானது

DMI , British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்

யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்
**DIPLOMA IN ENGLISH**
புதிய பிரிவு ஆரம்பம் 7/11/2022 Mon 9 am
**SPOKEN ENGLISH** நேரடி வகுப்புக்களாக
German - Germany ,Swiss நாட்டுக்கு செல்வோருக்கு Deuctsch
French - France நாட்டுக்கு செல்வோருக்கு (C-5198)

**DMI COMPUTER EDUCATION**
யாழ்ப்பாணம் No.113, கஸ்தூரியார் வீதி 0777 24 07 07 021 222 4403

| நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | சண்டிலிப்பாய் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| 021 226 2470 | 021 227 0775 | 021 224 1970 | 021 225 6665 | 021 228 5655 |
| 0777577333 | 0777227074 | 0776032300 | 0761354503 | 0776398096 |

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (13294) 076 825 7716 (ஆகாஸ்)

**Professionals ஐ அணுகவும்**

Canada, UK Europe நாடுகளின் பல்கலைக்கழகங்களில் உயர் கல்வி பெற (IELTS 5.5 தேவை) மேலும் அனைத்து நாடுகளிற்குமான துரித வீசா விண்ணப்ப சேவை மற்றும் இலவச ஆலோசனைகளை பெற எம்மை அணுகுங்கள்,

Rajeev & Team 077 768 7821
Nallur Jaffna. (13313) spraj54@gmail.com


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



அன்புடையீர்!
கடந்த 04.10.2022 செவ்வாய்க்கிழமை அன்று இறைபுதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் ஞானசுந்தரம் உதயசங்கர் (மோகன்)**
(மோகன் சவுண்ஸ் உரிமையாளர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 03.11.2022 வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.26, பெரியதம்பிரான் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (13309)
இங்ஙனம்:- குடும்பத்தினர் 077 077 6234

## மரண அறிவித்தல்

மண்ணில் 05 – 05 – 1969



விண்ணில் 01 – 11 – 2022

**செல்வராஜா றமேஸ்**
(உள்ளூராட்சி உதவியாளர் – காரைநகர், தற்காலிகமாக மானிப்பாய் பிரதேச சபை)

*'ஹேமா இல்லம்' நவாலி வடக்கு மானிப்பாயை பிறப்பிடமாவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. செல்வராஜா றமேஸ் 01.11.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்.*

*அன்னார் காலஞ்சென்ற செல்வராஜா - செல்வராணி தம்பதியினரின் புதல்வரும் சுதா (ஆசிரியை யா/ மானிப்பாய் சென் ஆன்ஸ் றோ.க.த.க பாடசாலை) பாசமிகு கணவரும் அஸ்வினி, ஒசாயினி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), நிஷாந் (யாழ். மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுரேஷ் (ஆசிரியர் - யாழ். மத்திய கல்லூரி) மற்றும் காலஞ்சென்றவர்களான கேமலதா, சதீஸ் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.*

*அன்னாரின் பூதவுடல் 03.11.2022 வியாழக்கிழமை 1 மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று பூதவுடல் ஆரியம்பிட்டி இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.*

*இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

*தகவல்:* குடும்பத்தினர்
077 522 6462 (13327)


**பயிலுனர்கள் தேவை**

யாழ். திருநெல்வேலியிலுள்ள எமது கணக்கியல் நிறுவனத்திற்கு A/L கொமர்ஸ் பிரிவில் சித்தியடைந்தவர்கள் HNDA, Chartered, AAT மாணவர்கள் தேவை. பயிற்சிக் காலத்தில் நாளாந்தப்படி போக்குவரத்துச் செலவு வழங்கப்படும். (13326)

074 368 0029

**அமெரிக்க லொத்தர் இலவச விசா**
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
Passport அவசியமில்லை
55'000 விசாக்கள் இலங்கையர்களுக்கு அதிக வாய்ப்புக்கள்
இன்னும் ஐந்து நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன
நீங்கள் தவறவிடும் ஒவ்வொரு கணமும் இன்னொருவருக்கான விசா வாய்ப்பாக அமையும்.
இதுவரை மெக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்கா சென்றுள்ளார்கள்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
ஏமாற்றங்களை தவிர்க்க உடனே பதியுங்கள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
வெளிநாட்டு உதவி இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரியசந்தர்ப்பம்
எம்மூடாக விசா வென்ற வெற்றிக்கதைகளை எமது V2 Travels and Tours எனும் Facebook பக்கத்தில் பார்வையிடலாம். (C-5189)
**V2 Travels** 0768226240 0768226244

**Sb Travels & Tours Pvt Ltd**

தற்போது Colombo to Chennai (இருவழி)
Spicejet - 63999/=
Indigo - 64999/=
Srilanka Airlines - 73999/=

விமான பயணச் சீட்டுக்களையும் Dubai, Malaysia, India, Bangkok விசாக்களையும் பெற்றுத் தரப்படும்.
தொடர்புகளுக்கு : Sb Travels & Tours Pvt Ltd
No.198, Kasthuriyar Road, Jaffna (021 222 8555, 076 691 1082, 83)
No.41, Gintupitiya Street, Colombo - 13 (011 233 3322, 076 691 1089)
No.324, Aluthmavatha Road, Colombo - 15 (011 254 0280, 077 108 3481)
Email : sbtravels99@yahoo.com (நிபந்தனைக்குட்பட்டது) (C-5194)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் சேவையாற்றும் ஆசிரியை
**திருமதி கயேந்திரராணி குகதாசன்**
அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி புகனேஸ்வரி வேலாயுதம்**



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ கோண்டாவில் இராமகிருஸ்ண மகா வித்தியாலயம் (C-5199)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org